இக் காரணத்தால் வழிபாடு பலவாயிற்று. வழிபாடு பலவானாலும் 'மக்கள் ஒரே உணவுப்பொருளுக்குத் தங்கள் தங்கள் கருத்திற்கேற்ப வெவ்வேறான சுவைகளை ஊட்டி அதற்கேற்பநிறம், உருவம், பெயர் முதலியவைகளை வெவ்வேறாகக் கொடுத்தழைத்தாலும் அதனுள்ளிருக்கும் உணவுப் பொருள் ஒன்றேவாதற்போல' யாவற்றிலும் உள்ளொளியாய நிறைந்திருப்பது ஒன்றே என்பதை யாவரும் ஒப்புக்கொண்டனர். சமயாச்சாரியாகளு

டைய திருப்பாடல்களை நோக்குவார்க்கு இவ்வுண்மை தெற்றெனப்புலப் படும்.

இவ்வாறு நாளாவட்டத்தில் வழிபாடு வேறுபட்டாற் போலவே வழி பாட்டை மேற்கொண்டாரும் வேறுபடலாயினர். அதற்கு 'பல்வேறு நாட்டினர் பல்வேறு கொடிகளைவைத்திருப்பது போல, ஒவ்வொருவரும் தனித்தனிச் சின்னங்களையும் தரிக்கலானார்கள். அச்சின்னத்திற்கு வேண்டிய பொருளை எளியமுறையில் கிடைக்கக்கூடியதாகவும், தோற்றப் பொலிவினை அளிக்கக்கூடியதாகவும் தேர்ந்தெடுத்தனர். திருநீற்றையும் திருமண்ணையும் நோக்குவார்க்கு இவ்வுண்மைதெற்றென வெள்ளிடை மலை போல் விளாங்காநிற்கும்.

இவ்வாறே இறைவழிபாடு செம்மையான நெறியிலே நடைபெற்று வந்துள்ளது.

இப்புனிதமான இறைவழிபாடு தற்கால மக்களில் ஒருசிலருக்கு நம் பிக்கைக் குறைந்திருக்கிறது. இந்நிலைக்குக் காரணம் இறைவழிபாடல்ல— இறைவழிபாட்டை மேற்கொண்டுள்ளதாகக் கூறும் மக்களில் ஒருசாரோ ஆவர். எவ்வாறெனில், அன்னோர் தம்சுயநலத்திற்காக 'கதாடைதரித்துத் தீங்குபுரிவதைப்போல' இறைவழிபாட்டை போர்வையாகக்கொண்டு எத் தகைய தீச் செயல்களையும் துணிந்தியற்றுகின்றனர். இதைக் கண்ணும் மக்கள் இறைவழிபாட்டைக் குறைகூறுகின்றனர். இவ்வாறு குறைகூறு தலும் அறியாமையின் பாற்படும். ஏனெனில் காரணம் கூறுதும், கிராமத்தான் ஒருவன் ஏதோவொரு அலுவலை முன்னிட்டு சென்னைக்கு வருகின்றான். சென்னைக்குப் புதியவன், மேலும் உலக அனுபவம் அற்ற வன். அன்னிலையில் மேனாட்டாடையில் தோன்றும் யாவரையும் கற்றோன் எனக் கருதுகின்றான். நாள் செல்லச் செல்ல மேனாட்டாடைகளில் காட்சி யளிப்போரில் பெரும்பாலோர் எழுத்தறிவற்றவர் என்பதைப் புரிந்து கொள்ளுகிறானே வொழிய யாவரையும் அவன் அவ்வாறு மதப்பிடுவதில்லை. அதைப்போன்றே இறைவழிபாட்டில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

தற்கால மனநிலை மாறுவதற்கு யாது செய்தல் வேண்டுமென்பதை நோக்குதல் இன்றியமையாததாகின்றது.

> 'மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்
> பழித்தது வொழித்து விடின்' என்று

உயர்ந்த நெறியை வள்ளுவர் கற்பித்திருந்தாலும் மக்கள் யாவரும் அவ்வவர் களுக்குரிய சின்னங்களைத் தரித்தல் தகைவுடைத்தாகும். இவ்விடத்தில் தான் இறைவழிபாடு உயர்வையும் தாழ்வையும் அடைகின்றது என்பதை

யாவரும் உய்த்துணர்தல் வேண்டும். யாங்ஙனமெனில் சின்னத்தைத் தரித்தவன் செந்நெறியில் ஒழுகுங்காலை சின்னத்திற்கும் தரித்தவர்கட்கும் பெருமை ஏற்படுகின்றது. அன்றேல், தீநெறியில் ஒழுகுங்காலை தன்னோடும் அச்சின்னத்திற்கும் பெருங்கேட்டை விளைவிக்கின்றான். குறிப்பாகக் கூறுமிடத்து சின்னத்தைத் தரிக்காதிருத்தலைக் காட்டிலும் தரித்துத் தீச்செயல் புரிதலே இறைவழிபாட்டிற்குப் பெருங்கேட்டை விளைவிப்பதாகும். ஆகையால், இறைவழிபாட்டில் கருத்துடைய ஒவ்வொருவனும் புறத்தூய்மையோடு அகத்தூய்மையை மிகுதியாகக் கைக்கொள்ளுதல் இறை வழிபாட்டிற்கு நலம் பயப்பதாகும். இனி மக்களும், மனிதன் முக்குண வயத்தால் மாறுபடுவதாலும், அகமும் புறமும் ஒவ்வாமாந்தர் பலர் வாழ்வதாலும் யாவருரையும் புறத்தோற்றத்தைக் கருவியாகக் கொண்டு ஓர் முடிவுக்கு வாராமல் வாழ்க்கைக்குரிய வழிகளை வகுந்தளித்த வள்ளுவர் கூறியாங்கு;

'கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்' என்ற குறளுக்கேற்ப

குணத்தால் கொள்ளுதலும் தள்ளுதலும் சாலச்சிறப்புடைத்தாகும்.

இந்நிலையில் யாவரும் ஒழுகுவார்களேயானால் தெய்வ நம்பிக்கையற்றவர் என்று குறைகூறித் தம்காரியங்களையும் புகழற்ற புகழையும் நிலை நிறுத்த முயல்வார் பாடம் பெருவதுடன் நாடு நலமுறும். அன்னிலையில் இறைவழிபாடும் செம்மையடையும்

ஆக்கியோன் : **சா. நடராஜன்**
தலைமைத் தமிழாசிரியர்

தேசீய பள்ளிப் பிள்ளை

செந்தமிழ்ச் செல்வா! விடியற்காலையில் விழி. தென்றமிழ்த் தோன்றலே!! படுக்கையினின்று எழு. தீந்தமிழ்த் தனயா!!! தயாபரனைத் தொழு. காலைக் கடன் முடி. பள்ளிப் புத்தகம் படி; சுத்த முறக் குளி. கந்தையாயினும் கசக்கிக்கட்டு. அன்னையளித்ததையருந்திக்களி. பெற்றோரைப் பணிந்து பள்ளிக்குப் போ.

போகும் போது அரியரியாய்ப் புத்தகங்களை அடுக்கிச் செல்லாதே. பாடதிட்டத்திற்கேற்றவற்றை மாத்திரம் பதமாய் ஏந்திச் செல். ஒரு கட்டுப் புத்தகங்களை வலது கைப்பெருவிரல் சுட்டுவிரல்களுக்கிடையே தொட்டதுந் தொடாததுமாய்ப் பட்டதும் படாததுமாய்ப் பிடித்து ஊசலாட்டிக் கொண்டே போகாதே. நீ எட்டு வெட்டி நடக்கும் போது ஒன்றிரண்டு புத்தகங்கள் குட்டிக்கரணம் போடுகின்றன. வகுப்புச் சென்று பார்க்கிறாய்.

மிரள மிரள விழிக்கிறாய். வாயைப்பிளக்கிறாய் தட்டுக் கெட்டுப் போயின வேயென்று தவிக்கிறாய். ஏன்? துடையில் தட்டிக்கொண்டு நடந்தாய் அவை எட்டி யெட்டிப் போய்விட்டன.

கலாமண்டபத்தில் கலைமகளின் கருணை பெறுவான் பொருட்டுப் போகும் கண்மணியே! ஆலயம் தொழுவது சாலவும் நன்று. ஏனைய ஆண்டவன் ஆலயவழிபாட்டிற்கு எவ்விதம் போகிறாய்? வெற்றிலை பாக்கு, கர்ப்பூரம், தேங்காய், தீங்கனிகளைத் தட்டிலேந்தி பயபக்தியுடன் போகிறா யன்றோ? கலாலயமாம் பள்ளிக்கு மாத்திரம் கண்டதே காட்சி கொண்டதே கோலமாய்ப் போகலாமா? எழுது கோலே கர்ப்பூரம் மற்ற உபகரணங் களே வெற்றிலை பாக்கு, அச்சுப்புத்தகங்களே தேங்காய், நோட்டுப் புத்தகங் களே கதலிவர்க்கங்கள். இவ்வித காணிக்கைகளை அழகான கைகளாகிய தாம்பாளங்களில் ஏந்தி இன்பமுடன் இடது மார்போடு அணைத்துக் கொண்டு போய்ப்பார். இருதயத்தோடு இணைத்துக் கொண்டு நடந்து பார். புத்தகங்கள் உன் கைப்பிடி தளர்ந்து தட்டுக்கெட்டுத் துலைவதும் நீ அலைவதும் ஏற்படாது.

வாணி விலாஸத்தில் வந்தனை முடிந்து வகுப்பை அடைகிறாய். ஆசானுக்கு முன்னால் நேசமாய் வணங்கு. அவர் போதனைகளைப் பய பக்தியுடன் கேள். ஓய்ந்த போது ஆய்ந்து பார். சகல கலாவல்லியின். சற்புத்திரன் என்றே கருதலாம் ஆசிரியரை. அவர் மாத்திர மென்ன? நீங்களுந்தான். அவர் மூதவர். நீவிர் இளையவர். அஞ்ஞானவிருளன்ன கரும் பலகை மீது மெஞ்ஞானச் சுடரென்ன சுண்ணும்புக் கட்டியால் வேண்டுவனவற்றை எழுதி உனது அகக்கண்ணைத்திறந்து வைக்கும் ஆசானை ஏசாதே. வணங்கக் கூசாதே. மாதா பிதா குரு தெய்வம். அன்னாரைப் போற்றிச் சான்றோனாகுக. தூற்றித் துயருறாதே.

தெய்வீக இராமகிருஷ்ணரென்ன. பண்பு மிக்க பரம ஹம்ஸ விவேகானந்த ரென்ன. மதஸ்தாபன சங்கர இராமனுஜ மத்வாசார்யர் களென்ன. அஞ்சா நெஞ்சரான சிவாஜி, கிருஷ்ணதேவராயர், கட்ட பொம்மனென்ன. செந்தமிழ்ச் சிகாமணிகளாம் சேர சோழ பாண்டிய மன்ன ரென்ன, கோதிலாக் குணமுடைய ஜான்ஸி ராணி, அகல்யாபாய் மங்கை யர்க்கரசியார் போன்ற வீர மாதர்களென்ன, தனக்கென வாழாப் பிறர்க் குரியரான காந்தியடிகள், இராமலிங்கர், சிதம்பரம் பிள்ளை யென்ன, தம் கடன் பணி செய்து கிடக்கும் நேருஜி, இராஜகோபாலாச்சாரியாரென்ன, இன்னும் இன்னோரன்ன மஹான்கள் எல்லாரும் அவரவர் இளமையில் ஆசிரியர் ஆசிபெற்றவர்கள்தானே.

உங்களில் அன்னாரன்ன குணக்குன்றுகளும் குன்றின் விளக்குகளும் ஏன் இருக்கக் கூடாது? சாகோபசாகையாய் வளர்ந்து பலர்க்குக் களைப் பாற இளைப்பாற நிழல் தந்து பின்னும் பலப்பல விதங்களிலும் உயிர்களுக்கு உதவும் ஆல விருக்ஷம் சிறு மீன் சினையினும் நுண்ணிய விதைக்குள் அடங்கி ஒடுங்கிக் கிடக்கவில்லையா? அது போல் உங்களில் வருங்கால வள்ளல் களும், எதிர்கால ஏந்தல்களும், தாணி போற்றும் தியாகிகளும் மறைந்து நிறைந்து இருக்கிறீர்கள். மண்ணில் விழுந்த விதையானது தண்ணீரும் கதிரவன் கதிரும் பட்டு, முளைத்துத் துளிர்த்துத் தளிர்த்து மாமாவது போல் தாயும் தந்தையும் தரையும் தண்ணீராயுமிருக்க, ஆசான் போதனை கதிரவன் கதிரையொத்து உன்னுள் ஒளிந்து கிடக்கும் அறிவுச்சுடரை அகத்தினின்று புறத்தே வீசிப்பிரகாசிக்கச் செய்கின்றது.

அவ்விதம் பிரகாசிக்கச் சீரிய ஒழுக்கமும், உயரிய பழக்கமும், இனிய சொற்களும், தணிந்த குணங்களும் உன்னிடம் தலை தூக்கி நிற்கவேண்டும். விளையும் பயிர் முளையிலே. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். வம்புச் சண்டையை விலைக்கு வாங்குவதும், கோள் சொல்லிக்கொக்கரிப்பதும், முணு முணுத்து, வெடு வெடுத்து, கடு கடுத்துப் பட படப்பாய்ப் பேசு வதும் ஒழிக்கீனமானவை. காகிதம், பென்சில், பேனு, துடைப்பான் போன்ற பொருள்களை பிறரிடம் அடிக்கடி கடன் கேட்கும் வாடிக்கை மிகக் கெட்டது. பென்சில் சீவின மரச்சக்கைகளை மெல்லுதலும், பிளேட் மெல்லிய எஃகுத் தகடுகளை ஒடித்து வாயில் அடக்கி வைப்பதும் சில சமயம் குண்டூசியை வாய்க்குள் ஒதுக்கிவைப்பதும் அம்மம்ம! ஆபாசமான வழக்கங்களன்றோ? ஆபாசம் மாத்திரமா? பேராபத்தும் கூட. சூயிங்கம் என்ற ரப்பர் போன்ற இனிய வஸ்துவை வாய் ஓயாமல் மெல்லும் வாடிக்கை ஒன்று மாணவரிடையே மலிந்து விட்டது. பாடம் நடக்குங் கால் காகித உருண்டைகளை நேசன் மீது வீசி எறிவதும் அவன் திரும்பிப் பார்த்தால் தலை குனிவதும் ஒரு விளையாட்டாம். குற்ற முள்ள நெஞ்சு குறு குறுக்கிறது. குறும்பு செய்தான். தலை குனிகிறான். விளையாட்டே வினையாயும் முடிகிறது. கத்தியினல் மேசையை சீவுகிறதும், மசியை அங்கு மிங்கும் தெறிப்பதும் தடுக்க முடியாத தொழில்களாய் விட்டன.

இவைகளெல்லாவற்றையும் விட மிகக் கேவலமான ஒரு பழக்கம் மாணவரிடையே காட்டுத் தீ போல் பரவி வருகிறது. ஏன்? பெரியவர் களிடத்திலும் கூடக்காணப்படுகிறது. அது என்ன? அது தான் நகங் கடித்தல் கடித்துக் கிழித்தல். அழுக்கைச் சுவைத்தல், எங்கும் யார் மீதும் துப்புதல். தன்னை மறந்து கவ்வி கவ்வி, விட்டு விட்டு நகங்களைக் கடித்துப் பிளந்து நாளடைவில் விரல்களின் நுனியில் புண்களை உண்டாக்கிக் கொள்ளும் இந்த வெட்கக்கேடான தூர்ப்பழக்கம் மாணவ சமூகத்தில்

எப்படியோ நுழைந்து விட்டது. நகங்கள் விரல்களுக்கு அழகு செய்வன மக்கள் பற்களில் அகப்பட்டு அவதிப் படுவன வல்ல.

தேசியத் தோன்றல்களே! உலகம் ஒவ்வாமை நீக்கப் பெறின் உலகம் போற்றும் உத்தமர்களாய் விளங்கலாம். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள். பள்ளிப் பருவத்தே தெள்ளியராகுங்கள். பெற்ற வயிறு விளங்க, கற்பித்த நாடு திகழ, பள்ளிப் பிள்ளாய்! உன் வாழ்வு இளமதிம போல் இலங்குக. மறைவிலுள்ள இறைவன் அருள் பாலிக்க,

N. R. SESHACHARI.

நேஷனல் உயர் (ஆண்) பாடசாலை,
திருவல்லிக்கேணி 9-3-53.

ஆறும்படிவ மாணவர்கள் பிரிவுபசாரத்தன்று ஆற்றப்பட்ட உரை

எங்கள் உள்ளத்து இடம்பெற்ற மாணவர்களே! இப்பள்ளியையும் எங்களையும் விட்டு விலங்கும் உங்களுக்கு நான் கூறப்புகும் செய்தி இதுவே.........நீங்கள் எல்லாந் தெரிந்தவர்கள். சூழ்நிலை உங்களை சிறிது பக்குவப்படுத்தியே வைத்திருக்கிறது. உங்களில் பலர் என்வயதை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனாலும் அனுபவத்தில் சிலபடிகள் நான் மேலே இருப்பேன்.

பள்ளி என்னும் கூட்டிலே அடைப்பட்டிருந்த நீங்கள் இறக்கை முளைக்கப்பட்டு சுதந்தரமாகப் பறக்க இச்சை கொண்டு நிற்கும் இவ் வேளையில் நான் கூறும் வார்த்தைகள் உங்கள் செவியில் ஏறுமோ? ஏறாதோ? ஆனாலும் என்னிடத்தில் ஒரு நம்பிக்கை உண்டு. நான் கூறுவதை நீங்கள் நிச்சயமாய் கேட்பீர்கள் என்பது தான் அந்நம்பிக்கை.

முட்டையிட்டபட்சி அடைகாத்து இறக்கை முளைக்கும்வரை ஆவனசெய்து உணவளித்து விரோதிகளிடமிருந்து காத்துவைப்பது போல எங்கெங்கோ பிறந்து வளர்ந்து இப்பள்ளிக்கு வந்து சேர்ந்த உங்களுக்கு வாழ்க்கையில் பறப்பதற்கு வேண்டிய இறக்கைகளை ஒட்டவைத்திருக்கிறோம். அந்த இறக்கைகள் இயற்கையாய் உண்டானவை அல்ல. ஒட்டு இறக்கைகள், உடைந்தாலும் நாங்கள் உத்தரவாதமல்ல. இக்காலக் கல்வியின் நிலைமை அத்தகையதாகி விட்டது.

இதற்கு யாரை குறை கூறுவது !

சிறைக்கூடம்போன்ற பள்ளிக்கூடங்களில் கைதிகள்போல் காலை 10 முதல் மாலை மணி 5வரை அடைப்பட்டிருக்கும் பாலர்களையா ? (அல்லது) வறுமையிலே வாடி வதங்கி தோல்வற்றி சாய்கையிலும் கடமை குன்றாது அரசியலார் பாட திட்டங்களை முடித்து உங்களைப் பரிசைக்ஷக்கு (மட்டும்) தயார்செய்யும் ஆசிரியர்களையா (அல்லது) பணமில்லை என்று பக்குவம்பேசி 'இக்கல்வியைதான் இன்று அளிக்க இயலும்', என்று கூறும் அரசாங்கத்தின் நிலையையா? யாரை குறை சொல்வது ? இது அகில இந்திய பிரச்சனை. விட்டு விடுவோம்.

குழந்தைகளே! படித்துவிட்டோம் என்று இறுமாப்பு அடையாதீர்கள். நீங்கள் எதைப் படித்துவிட்டீர்கள் ? உங்கள் வாழ்க்கையை வளம் படுத்தக்கூடிய ஏதாவது ஒரு தொழிலை நீங்கள் கற்றுக்கொண்டதுண்டா ? இல்லையே ! நீங்கள் படித்த மொழிகளில் எதிலாவதொன்றில் திறம் பெற்றதுண்டா ? உங்களை குறை கூறுகிறேன் என்று என்னை குறை சொல்லாதீர்கள். இதே முறையில் செல்லும் இக் கல்வியின் அஸ்தமனம் எந்நாளோ ?.........நாளை உங்கள் குழந்தைகளும் இக் கல்வியைத்தானே கற்கப்போகிறார். உங்கள் குழந்தைகள் வீழ்வதை நீங்கள் விரும்புவீர்களா ?

'என்ன ! பள்ளியை விட்டுச்செல்லும் எங்களுக்கு ஆசிகூறி தைரியமூட்டி அனுப்பவேண்டியிருக்க அதைரியமூட்டி ஆகாத கதையளக்கிறீரே !', என்கிறீர்களா !. உள்ளத்தை கண்ணாடிபோல் காட்டுகிறேன். நீங்களாக உங்கள் முகத்தை பார்த்துக்கொள்ள முடியுமா?

வயது வந்துவிட்ட நீங்கள் பெற்றோரையும்.........ஆச்சு, இப்படிப்பு முடிந்ததும், பையன் படித்துவிட்டான் என்று பெண் தேடச் சென்றுவிடுவார்களே உங்கள் பெற்றோர்கள்.—அவளையும் வைத்துக்கொண்டு வாழ ஏதாவதொரு வழியை வகுத்துக்கொண்டதுண்டா ? அன்புமிக்க மாணவர்களே ! இன்று விதைக்கப்படும் இவ் விதைக்கு சிந்தனை என்னும் உரமிட்டுப் பாருங்கள். ஓங்கி வளரும் ஒரு மரம்—பழுத்துக் குலுங்கும் பல விதைகள்—மரங்கள்—காடுகளை கிளம்பிவிடும். அன்றுதான் கல்வியிலே மறுமலர்ச்சி. அது உங்கள் கையிலேதான் உள்ளது, என்பதனாலேயே கூறுகிறேன். 'ஆவன செய்வேன்', எனப் பிரதிக்ஞைகொண்டு பள்ளியினின்று விடுதலை பெறுங்கள்.

குற்றமற்ற குழந்தைகளே ! ஒன்று கூறிமுடித்துக்கொள்ளுகிறேன். ஒழுக்கமுள்ளவர்களாக நீங்கள் விளங்குவதையே நான் விரும்புகிறேன். உங்களில் சிலர் இனி கல்லூரிப்படிப்புக்கு கடை



At Satyamurthi Sagar

CONNEMARA PUBLIC LIBRARY
23 AUG 1955
MADRAS



Namaste in a big way

PUBLIC LIBRARY
23 AUG 1956
MADRAS



Our School Bus



23 AUG 1955
MADRAS



The March Past

We pulled our weights and Our weights pulled !



Our Staff 1952—1953.

கால் நாட்டலாம். பலர் வாழ்க்கையில் புகுவதற்கும் அஸ்திவாரம் அமைக்கலாம். எங்குச்சென்றாலும் எந்த உத்தியோகத்தில் நீங்கள் அமர்ந்தாலும் ஒழுக்கமே உங்களை உயர்வடைச்செய்வது. பள்ளியில் நீங்களாக ஒழுக்கத்தை உணர்ந்திருக்கலாம். ஆனாலும் நீங்கள் அனுபவத்தில் உணரப்போகும் ஒழுக்கமே சிறந்தது.

செல்வங்களே! வானத்தின் வண்ணத்தை நோக்குங்கள் ஒளி தரும் சூரியனையும் பாருங்கள். தண்ணொளிச் சந்திரனையும், கண்சிமிட்டும் தாரகைகளையும் பாருங்கள். வையத்தையும் காணுங்கள். பாதளத்தை தொட்டுநிற்கும் நீலக்கடலையும் பாருங்கள். பச்சைநிற இச்சைஉண்டு பண்ணும் தாவரங்களையும் உற்றுநோக்குங்கள். அவைகளில் தேம்பியிருக்கும் அழகிலே ஒழுகும் கடவுள் தன்மையையும் காணுங்கள். அக்கடவுளின்—வழிகாட்டிகள்—வகுத்துள்ள வழியுணர்ந்து வாழ்க்கையை வளம்பெறச் செய்யுங்கள்.

குழந்தைகளே! எதையும் கூட்டுறவிலே—பொறுமையுற்ற பண்பிலே—மேன்மையுற்ற அன்பிலே—அறிஞர்காட்டும் ஆதரவிலே சாதிப்பீர்களாக.

அச்சம்கொள்ளாதே அது ஆண்மையின் இழுக்கு துச்சமாகப் பேசாதே—அது தூய்மையின் தூமகேது.

நமது தலைமுறையில் நமக்கு நடைமுறையில்காட்டிய காந்தியின் ஆயுதங்களான அன்பு—அஹிம்சை; சகிப்பு, சத்தியம் இவற்றை உறுதுணையாகக்கொண்டு முயற்சி என்னும் மூலபலத்துடன் செயல்படுங்கள். ஆண்டவன் உங்களுக்கு அருளட்டும்.

எஸ். சேஷாத்திரி.

தமிழும் தமிழ்க்கலையும்

தமிழ்க்கலைகள் அறுபத்துநான்கு உண்டென்று, நம், ஆன்றோர்கள் மொழிந்துள்ளார்கள். பண்ணிசை முதற்கொண்டு நாட்டிய சிறப்புப்பற்றி செப்புவனவெல்லாம் கலைதான். இங்கே ஒரு தலைப்பை எழுதியுள்ளேன். அதுவும் ஓர் கலைதான்.

தன்னலம் கருதாது பன்னெடுங் காலமாய் மக்களுக்கு நன்னலம் புரிவது நம் தமிழ்க்கலை ஒன்றுதான். தமிழ்க்கலையிலே கலை நுணுக்கம் வழிந்தொழுகும் வாய்ப்புப்பெற்ற, வள்ளுவன் தீட்டிய தெள்ளிய குறள் ஒன்றே போதும். இவ்வையத்தினை வாழவைக்க,

அவர் முப்பாலின் திறத்தினையும் ஒப்புயர்வின்றிச் செப்பினார் இனிய செந்தமிழ்க்கலையிலே.

செவ்வையுடன் செந்தமிழ் மொழியிலே சிற்பக்கலைமுதல் பற்பலக் கலைகளை அள்ளி எறிந்தாள் ஔவை மூதாட்டி சிலப்பதிகாரத்திலே சிந்தும் கலைகளும், அகநானூற்றில் அடங்கிய கலைகளும், புறநானூற்றில் புதைந்துகிடக்கும் கலைகளும், சங்கநூல்கள் தாங்கியிருக்கும் கலைகளும் இவ்வையத்தினை மட்டுமல்ல இவ்வானத்தையும் அதற்குமேல் இன்னும் உலகம் இருப்பினும் அவ்வுலகத்தையும் வாழவழி கற்றுக்கொடுக்க வல்லன.

இத்தகைய கலைச்சிறப்பு வாய்ந்த நாம் இழிந்த நிலையை அடைந்ததற்கும், ஏழில் உள்ள தமிழ்க்கலையும் கற்றுணர்ந்து தமிழாசிரியர்தொழில்புரியும், தமிழ்த் தெய்வங்களைப் போற்றுதற்கும், நாடு காடானதற்கும், வயல் வறண்ட பாலைவனமானதற்கும், நம்மில் ஒற்றுமை இன்மையும், ஒழுக்கம் குறைவும், பேதங்களை வளர்த்ததும் காரணங்களாகும்.

நாட்டியமாடி நாட்டினை மகிழவைத்தாள் மாதவி என்ற பத்தினி. மாநிலம் புகழும் அளவிற்கு நடனக்கலை சிறந்திருந்தது என்றால் நடனக்கலையைப்பற்றி எண்ணி உருகாமலிருக்க முடியுமா ? சீவகன் இசைத்த இன்னிசை மேதனியோரைக் களிப்புக்கடலில் மிதந்திடச் செய்ததென்றால் அதைப்பற்றி பெருமையாகப் பேசாமலிருக்க முடியுமா ?

நம் தமிழ் இத்தகைய நிலையிலிருந்ததால்தான் மற்றைய நாடுகள் நம் தமிழ்நாட்டின் கலைக்குத் தலை வணங்கின.

மாணவர்களே ! கலைப்பண்பு சிறந்த தமிழையே உங்கள் உயிரென மதியுங்கள். ஒழுக்கக் குறைவுடன் இழுக்கு நிறைந்த வாழ்வு வாழவேண்டா. போருக்குச்சென்று இந்திய இரத்தமானது செந்தமிழ் மிளிரட்டும் ! உங்கள் உயிர் உடலில் இருக்கும்வரை தமிழ்ச்சொல்லை ஒலிக்க வேண்டும்.

நாடு வாழவும், கேடு தீரவும், நாம் இனிச் செய்யவேண்டுவது, நந்தமிழ் மொழியிலே, சிந்திக்கும் கலைகளை நம்முடன் படித்து இந்த புவியின் உள்ளே இருக்கும் எந்த வகையிலும் முந்தியிருப்பதே ஆகும். என்றும் உன் கீர்த்தி பரவத் தமிழ் ! தமிழ் !! தமிழ் !!! என்று உன் வாய் ஓயுமட்டும் சொல். உன் உடலிலிருந்து ஓர் சொட்டு இரத்தம் உதிரச் சொல்.

வாழ்க தமிழ் ! வாழ்க தமிழ்க்கலை !! ஓங்குக வெற்றி !!!

நடராசன்,

ஆறும் படிவம்.

பௌத்த சந்நியாசினி

(கோவிந்த வல்லப பந்த் எழுதிய ஹிந்தி "மிலன் முகூர்த்" என்ற கதையை மொழி பெயர்த்தது)

வாஸவதத்தா மிகவும் அழகுடையவள். அவளுடைய குரல் வீணையை பழித்தது. அவளுடைய கண்கள் மானின் கண்களை ஒத்து இருந்தன. எல்லாம் இருந்தும் அவள் ஒரு வேசி. ஏனோ கடவுளின் இந்தச்ருஷ்டி? ஆனால் உலகப்போக்கில் கவனித்தோமானால் சேற்றிலேதான் செந்தாமரை தோன்றுகின்றது. எல்லாம்வல்ல கடவுள்தான இவ்விஷயங்களை அறிவார்.

ஒருநாள் வாசவதத்தாவின் வீட்டின் அருகில் ஒரு பௌத்தபிக்ஷு பிச்சை கேட்கிறான். பிக்ஷுவை பார்த்த வாஸவதத்தா தன் வசம் இழந்து விடுகிறாள். பௌத்தபிக்ஷுவும் இளம் வயதினன். தகதகவென்று அவனுடைய சரீரம் பிரகாசிக்கின்றது. அவனுடைய கண்களில் ஒருவித அமைதி குடிகொண்டு இருந்தது. அவர்களுக்கு இடையே சம்பாஷணை நடைபெறுகிறது.

வாஸ்வதத்தா— பிச்சைப்பாத்திரத்தை இன்னும் அருகில் கொண்டுவா.

உபதுப்தன்—அம்மா, தங்களுடைய கைகளில் ஒன்றுமே இல்லையே!

வாஸ்வதத்தா— இதுவரை யாராலும் அடையாத ஒரு பெருஞ்செல்வத்தை நீ அடையப்போகிறாய் என்று சொன்னாள்.

உபதுப்தன்— உங்களுடைய கை பொன் ஆபரணங்களைக் கொண்டு நான் என்ன செய்வேன்?

வாஸ்வதத்தா—நான் இந்த பொன் ஆபரணங்களைப்பற்றி சொல்லவில்லை வாலிபனே. இது கூடவா தெரியவில்லை. காதலின் அணைப்பு இந்த கைகளில் நிறைந்து உள்ளது. அதை நான் உனக்குத் தரப்போகிறேன். கற்பனை செய்துப்பார் இளம் வாலிபனே. எந்த வாஸவதத்தாவினுடைய முகத்தைக்காண ராஜாராஜாக்கள் தவம் கிடக்கிறார்களோ அவள் இன்றையதினம் உனக்கு அன்பணைப்பு தரப்போகிறாள். இதைக்கேட்ட உபகுப்தன் முகம் சிறிதேனும் மாறவில்லை. இளஞ்சிரிப்பு சிரிக்கிறான். பேசாமல் அசைவற்று நிற்கிறான். பதில் ஏதும் பேசவில்லை.

வாஸவதத்தா—பாத்திரத்தை என் முன்காட்டு பிக்ஷுவே! நான் என்னுடைய ஹிருதயத்தையே உனக்கு பிச்சையிடுகிறேன்.

உபதுப்தன்—அப்படியென்றால்?

வாஸ்வதத்தா—இதன் அர்த்தம் விளங்கவில்லையே? இந்த வாலிப உடல் பிச்சை எடுக்கத்தகுதியானது அல்ல. அழகான வாசனையுள்ள புஷ்பம் காட்டிலே வாடி வதங்கி போவதற்கு அல்ல. எங்கள் வீட்டில் தங்கலாம் வாருங்கள். நான் தங்கள் வாழ்க்கைத்துணைவியாகி விடுகிறேன்.

உபகுப்தன்—நான் இப்பொழுது வரவில்லை. கூடிய சீக்கிரம் வருகிறேன்.

வாஸவதத்தா—தாங்கள் இந்த வாரத்திற்குள் வருவீர்களா?

உபகுப்தன்—இவ்வருஷ முடிவிற்குக் கட்டாயம் வருகிறேன் என்று சொல்லி புத்தசங்கத்தை நோக்கி புறப்படுகிறான் புத்த பிக்ஷு.

★ ★ ★ ★

மாதங்கள் கடந்தன. இயற்கையும் தன்னுடைய செயல்களை சரிவர செய்துவந்தது. பருவங்கள் அதன் வழி சென்றன. உபகுப்தன் வருவான் என்று எதிர்பார்த்து பார்த்து வாஸவதத்தா அநேக ஆடைகளை அணிந்து மகிழ்ச்சியுடன் இருக்கிறாள். ஆனால் உபகுப்தன் வரவில்லை. வாஸவதத்தா மனம் வருத்தமுற்றது. வாஸவதத்தா தெரு பணக்காரனின் பணத்தின் மேல் ஆசைப்பட்டு நேசிப்பதாக பாவித்து லக்ஷபதியை கொன்று விடுகிறாள். விஷயம் ஊரிலுள்ளோருக்கு தெரிந்துவிடுகின்றது. நியாய ஸ்தலத்தில் விசாரிக்கப்படுகிறாள் வாஸவதத்தா. அவளுடைய மிருதுவான கைகளை வெட்டும்படியாகும் கண்களை பிடுங்கும்படியாகவும் ஆணையிடப் பட்டது. இதற்கிடையில் வாஸவதத்தா தனக்கு இரண்டு நாட்கள் இடைவேளை தரவேண்டுமென்றும் அதற்குள் உபகுப்தனை பார்த்துவிட்டு தண்டனைப்பெற தயாராகி விடுவதாகவும் சொன்னாள். அவளுடைய பிரார்த்தனை நிராகரிக்கப்பட்டது. அவளுடைய பணம் அவருக்கு உபயோகப்படவில்லை. அவளின் சௌந்தாயம் உபயோகப்படவில்லை. அழகுடன் விளங்கியபோது எல்லோரும் அவளைக்காண வெகு கஷ்டப்பட்டனர். இப்பொழுதோ தெருவில் போகும் குஷ்டரோகி முதற்கொண்டு அவளைப் பார்க்காமலே எட்டிச் சென்று துப்பிவிட்டு செல்லுகிறான். என்னே காலத்தின் கொடுமை! அந்த சமயத்தில்தான் உபகுப்தன் வருகிறான். இன்னும் அவ்வருஷம் முடிய சில நாழிகைகள்தான் பாக்கி இருக்கின்றது. வாஸவதத்தாவின் உடலின்மேல் தொடுகிறான்.

வாஸ்வதத்தா—யார் நீங்கள் என்னை தொடுவது!

உபகுப்தன்—நான்தான் உபகுப்தன், பிக்ஷு.

வாஸ்வதத்தா—நான் எப்பொழுது அழகுடன் விளங்கினேனோ அப்பொழுது வரவில்லை. என்னை தண்டிப்பதற்குமுன் வரவில்லை. எல்லாம் முடிந்து என் உயிர் போகும் தருவாயில் ஏன் வந்தாய்? திரும்பிச்செல் என்றாள்.

உபகுப்தன்—நீதானே என்னைக் கூப்பிட்டாய்? நான் இங்கு உன்னுடைய அழகை அனுபவிக்கவோ, அல்லது சொந்த இச்சையினாலோ வரவில்லை. சரீர அழகுவீண் என்பதற்கு இதோ உன்னுடைய சரீரப் சாட்சி. பணம் உலகத்திற்கு உதவாது என்பது உன்னுடைய அளவுக்கு மிஞ்சிய பணம் பதில் கொடுக்கும். நான் உன் அருகில் வந்துள்ளேன் ஏதாவது சொல்வதென்றால் சொல் என்றான் உபகுப்தன்.

வாஸ்வதத்தா—ஸ்வாமி இன்றுதான் என் அகக்கண்கள் திறந்தன. நான் என்ன சொல்வேன்! உங்களுடைய கேள்விகளினால் என்னுடைய பதிலையே நீங்கள் பிடுங்கிக்கொண்டீர்கள். நீங்கள் என் அருகில் கொஞ்சம் நேரம் இருங்கள். உங்களுடைய ஸ்பரிசத்தினால் இந்த பாபி செய்த பிழைகளை கடவுள் மன்னிக்கட்டும் நீங்களே எனக்கு சில விஷயங்களை சொல்லுங்கள்.

உபகுப்தன்—உலகத்தில் துக்கங்கள் நிறைய ஏற்படுவதற்குக் காரணம் ஆசை. ஆசையினால்தான் நீ உன் கடமையை மறந்தாய். பணக்காரனை கொன்றாய். இந்தசமயத்தில் அந்த ஆசையானது உன்னை ஆபத்திலிருந்து நீக்கிற்றா? ஆகையால் ஆசையை ஒழிக்கவேண்டும்.

வாஸ்வதத்தா—பிக்ஷு, இதனை நீங்கள் எனக்கு முன்னமே சொல்லி இந்த பாபச் செயல்களிலிருந்து ஏன் மீட்கவில்லை. இப்பொழுது அதிக நாழிகை கழித்தல்லவா வந்தீர்கள்.

உபகுப்தன்—நேரம் ஆகவில்லை. உன்னுடைய புறக்கண்கள் அழிந்து விட்டன. ஆனால் உன் அகக்கண்கள் திறந்துவிட்டது. எழுந்திரு, புத்தரின் உபதேசங்களை கடைப்பிடி. புத்தர் உன்னுடைய துக்கங்களை போக்குவார். விடுதலை செய்வார் உபகுப்தன் தன் பரிசுத்தக் கையினால் வாஸவதத்தாவை ஸ்பரிசித்து புத்த சங்கத்தை நோக்கி அழைத்துச் சென்றான்.

★ ★ ★ ★

தற்சமயம் வாஸவதத்தா ஒரு புத்த சந்நியாசினியாக இருப்பதாக வதந்தி உலாவி வருகிறது.

V. GOPALAKRISHNAN,
Teacher.

மாணவர் உலகம்

[எஸ். சேஷாத்திரி]

மாணவன் என்பவன் யார்? உலக வாழ்க்கையைச் செம்மை பட நடத்த கடவுளால் நமக்கு கொடுக்கப்பட்ட காலமே இளமை. உலகியலையறிந்து அதற்குத் தகுந்தபடி தன் வாழ்க்கையை அமைத்து கொள்ள வாய்த்திருக்கும் வளமைப் பருவமே வாலிபம். நாடக அரங்கேற்றத்துக்கு முன்பு நடத்தும் ஒத்திகையே போல் வாழ்க்கையில் புகு முன் வகை செய்து கொள்ளவேண்டி வாய்த்திருப்பதே மாணவப் பருவம். இளமையிலேயே கல்வியைக்கற்கபுகும் மனிதன் வாலிபப் பருவத்தில் அக்கல்வியை முடித்துக் கொள்வதாலேயே வாலிப, மாணவப்பருவம் ஒன்றென இங்கு கூறப்பட்டது. இளமையில் கற்பதில் நோக்கமில்லை. ஆனால் வாலிபப்பருவத்தில் நோக்கத்துடன் படிக்கத் தொடங்குகிறான்.

மனிதன் அன்றும் படித்தான். இன்றும் படிக்கிறான். மொழியின் செழுமையில் இன்பங்காண, அறிவைத்தேட, ஆன்மாவை அறிய, அன்று படித்தான். கற்றான் கடலன்ன கல்வியை. கசடறக் கற்றான்—கற்றதற்கேற்ப நிற்க. இன்றும் படிக்கிறான், வயிறு வளர்க்கப் படிக்கிறான். மொழியின் வளமைக்கல்ல. உத்தியோகத்தில் உயர்வுகாணப் படிக்கிறான்—அறிவின் உச்சியை எட்ட அல்ல. மொழியையும் படிக்கிறான்—ஆனால் எல்லை வகுத்துவிட்டான். அது இந்நாளின் இயல்பாகி விட்டது. உத்தியோகம் செய்வதே இக்கல்வியின் நோக்கமானதால் எல்லோரும் படிக்கின்றனர். எல்லோருக்கும் உத்தியோகம் கிடைப்பதில்லை. அதனால் கல்வியின் நோக்கம் தோல்வியில் முடிகிறது. பலருக்கு ஏக்கம்.

அதனால், கல்வியில் மறுமலர்ச்சிவேண்டும். தொழிற் கல்வியே நாட்டின் ஜீவநாடி இன்று நம்மைப் பிடித்திருக்கும் பசி, பிணி, வேலையில்லாத்திண்டாட்டம் இவைகளுக்கு ஆதாரமாக உள்ள இவ்வரட்டு கல்விவரட்சி அடையவும் புதிய தொழிற் கல்வி நாட்டில் நடமாடி நலிந்து நிற்கும் மக்களிடம் பொலிவு காட்டவும் கடவுள் தான் அருள் சுரக்கவேண்டும்.

இனி நாம் மேலே செல்லுவோம். இன்றைய உலக நிலைமை என்ன! அதில் மாணவர்கள் ஆற்றவேண்டிய கடமை யாது? மாணவனே! எங்கள் காலம் குறுகியது. பல ஆண்டுகள் யுத்தத்திலும், யுத்தபீதியிலுமே எங்கள் சிறு காலத்தை கழித்துக் கொண்டிருக்கிறோம். அதனால் தான் அதிக நாட்கள், எங்கள் காலத்துக்கு பின்னும் வாழப்போகிற உங்களுடையதே இவ்வுலகம், எனக்கூறுகிறேன், எங்கள் நாட்கள் பீதி நிறைந்ததாயிருக்கிறது.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியைக் கண்டு வியந்த நாங்கள் இன்று அது ஏன் வளர்ந்தது என்று வேதனைப்படுகிறோம். உலகத்தையே பஸ்மீகரமாக்கும் அளவுக்கு அது வளர்ந்து விட்டது. விஷமுடைய நாகப்பாம்பு நல்லபாம்புதான். ஆனால் அது கடிக்காது என்பதென்ன நிச்சயம். அதைக்கண்ட இடத்தில் கொல்லுவது தானே இயல்பாயிருக்கிறது.

அணுகுண்டுகளும், ஜலவாயு குண்டுகளும் மனிதகுலத்தை ! ஏன் ? உலகையே அழிக்காது என்பது என்ன நிச்சயம். அதன் சக்தியை ஒடுக்கவேண்டியது நமது கடமை அல்லவா ? இதனால் உங்களை அதைரியமூட்டுகிறேன் என எண்ணி ஏங்கவேண்டாம். உங்களுக்கு முன்னிருக்கும் பேராபத்தையும் உங்கள் கடமையையும் உங்களுக்கு சுட்டிக்காட்டவே இவ்விதம் கூறுகிறேன்.

நாம் இன்று பயமற்றுதான் வாழ்கிறோம். ஆனால் இன்றைய உலகவிஞ்ஞானிகளைக் கேளுங்கள். உலகைப் பொசுக்கக்கூடிய இவ் வாயுதத்தை ஏன் கண்டோம் ? இதனால் உலகத்துக்கு ஆபத்து வெகுதூரத்தில் இல்லை ! என்று அஞ்சுகிறார்கள்.

ஆனாலும் உலகவல்லரசுகளோ இவ்வாயுதங்களை எண்ணிக்கையிலும், சக்தியிலும் பெருக்கிக்கொண்டே தான் போகின்றன. உலகில் தங்கள் ஏகாதிபத்யத்தை அணு, ஜலவாயு குண்டுகளின் சக்தியினால் நிலைநிறுத்த எண்ணும் அரசுகளின் மடமையை என்னென்று சொல்லுவது. மனிதகுலம் நிலைத்திருக்க ஒருபுறமும், அக்குலத்தை வேருடனறுக்க மறுபுறமும் உண்டாகியிருக்கிற யுத்தமே இவ்வணுயுகம்.

'உலகம் இனி யுத்தத்தில் மூளாது என்பது என்ன நிச்சயம். மூண்டால் அணு ஆயுதங்கள் உபயோகிக்கப் படமாட்டாது என்பது தான் நிச்சயமா.' என்பதே இன்றைய உலக அறிஞர்களின் பிரச்னை. இப்பிரச்னையில் மாணவர்களுக்கே அதிக பங்குண்டு. மாணவர்களே ! பிற்கால உலகம் உங்களுடையது. மனிதகுலத்தை காப்பாற்ற வேண்டிய கடமை உங்களுடையது.

ஏன் ! எங்களைவிட அறிவும், ஆற்றலும், அதிக அனுபவமும் அடைந்துள்ள பெரியவர்களாகிய உங்களுக்கு உலகத்தை காப்பதில் பங்கில்லையா ? நீங்கள் செய்யாததை, செய்யமுடியாததை நாங்கள் என்ன சாதிக்கப்போகிறோம் என்கிறீர்களா ? உலகத்தின் உண்மைச் செல்வங்களே ! உணர்வு, ஊக்கம், மனோபலம், நம்பிக்கை யாவும் உங்களிடம் உண்டாகி செழுப்படைந்திருக்கும் தருணமிது. உண்மைவித்துக்கள் உரம்பெற்று ஆக்கத்தோடு ஆவேசங்கொண்டு வளரும் வளமையான வாலிபத்தீர் ! உலகை நல் வழிபடுத்த வேண்டிய வாய்ப்பு உங்களுடையதே.

கிரேக்கஞானி ஸோக்ரதாரும், யேசுநாதரும் என்ன குற்றம் சாட்டபட்டு கொலை செய்யபட்டார்கள் தெரியுமா! நாட்டின் இளைஞர்களின் மனத்தை புதியதத்துவங்களால் கெடுக்கும் தேசத் துரோகிகள் எனப் பழி சுமத்தப்பட்டார்கள். நாட்டின் சுதந்திரப் போரில் ஈடுப்பட்ட நேரு, நேதாஜி போன்ற புருஷோத்தமர்களின் நெஞ்சில், அவர்களின் மாணவப்பருவத்திலேயே சுதந்திர உணர்ச்சி ஊன்றி வளர்ந்தது. வாழ்க்கை பந்தத்திலே உழன்று உலமுறும் எங்களால் முடியாததை நீங்கள்தானே சாதித்து கொள்ளவேண்டும்.

காரியத்தை சாதிக்கும் தன்மைக்கேற்ப வலிமையை வாலிபத் திலேதான் வைத்திருக்கிறது இயற்கை.

உங்களுக்காக உண்டாகி இருக்கும் இவ்வுலகத்தில் அமைதி தவழவேண்டும். பீதியும் பயங்கரமும் போகவேண்டும். இன்றைய உலகம்—உங்கள் இளமை உலகம்—பீதியென்னும் பேயால் சூழப் பட்டிருக்கிறது. அப்பேயை ஓட்டு வதற்கு மாணவ மாநிலமே உங்களிடம் ஒற்றுமை நிலவட்டும், குறுகிய மனப்பான்மை மடி யட்டும். வகுப்புவாதங்கள் வீழட்டும், சகோதரத்வமும் சமத்து வமும் பெருகட்டும். உலகமும் ஒன்றுதான். குலமும் ஒன்றுதான். சீதோஷ்ணநிலைக் கேற்ப நடை, உடை, பாவனைகள் மாறுபடுவது போல் மதங்கள் பல மாறுபட்டுகாணப்படலாம். ஆனால் கொள்கை கள் ஒன்றே.

பாரதப்பெரு நாட்டின் பண்புடை பாலர்களே! நம் குடியரசு நாடானது இன்று உலகத்தில் நிலவிவரும் அச்சப்பிசாசை ஓட்ட பெரு முயற்சி செய்து கொண்டுவருகிறது. இது உலகமறிந்த உண்மை. இக்கொள்கையால் நம் நாட்டின் பெருமை அயல் நாடுகளில் உயர்ந்திருக்கிறது.

இத்தேசம் காந்தியின் தேசம். அஹிம்சையின் அளவு கோல் சத்தியத்தின் சான்று. சாந்தியின்சிகரம்.

அதனால் உன் நாட்டின் கொள்கைக் கேற்ப உழைப்பாய். உலகின்கண் சாந்தியை நிலைநாட்ட ஊக்கம் கொளவாய். புத்தர் முதல் காந்திவரைத்தோன்றி உலகத்துக்கே சாந்தியை அளித்த உன்தேசம், மாணவர்களே! உங்கள் ஒற்றுமையாலும்—உள்ளப் பண்பினாலும்—சத்தியநெறியினாலும் சுகத்துக்கே ஒரு சாந்தசிகர மாய் விளங்கட்டும்.

விதி வலிது

ஆர்க்காஸ் என்ற நகரில் தாமஸ் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் குடிகளிடத்தில் அன்பாகவும், அபிமானமாகவும் இருந்தான். அவன் நன்கு அரசாளும் சமயத்தில் ஒருநாள் நிமித்திகன் அரண்மனை சென்றிருந்தான். அச்சமயம் அவன் அரசனுடைய ரேகைகளைக் கண்டு தயங்கினான். அது கண்ட அரசன் "எவ்விதமான விஷயமாய் இருப்பினும் தெரிவி" என்றான். அதற்கு அவன் "உங்களுக்கு அடுத்தபடியாக அரசாளும் உரிமை ஓர் ஏழையின் மகனுக்கு வரப்போவதாகத் தெரிகிறது" என்றான். அரசனுக்குப் பிள்ளைப்பேறு இல்லாததால் கோபம் கொண்டு அவனைச் சிறையில் அடைக்கும்படி உத்தரவிட்டான். அவன் இதைப் பற்றி வருந்தும்போது சில மாதங்கட்குப் பிறகு ஓர் பெண் மகவு பிறந்தது. பெண்மகவு பிறந்ததால் அவன் வருத்த முற்றான்.

ஓர் நாள் மந்திரி அரசனுடைய துக்கத்தை மறைப்பதற்காக, அரசனையும், மற்ற சேனைகளையும் அழைத்துக்கொண்டு காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். வேட்டையாடும் சமயத்தில் சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்டு சேனைகள் ஒரு பக்கம் சிதறியும், இராஜன் ஒரு பக்கமும் சென்று விட்டார்கள். இவ்வாறு சேனைகள் சிதறினவுடன், அரசன் வழியைப் பார்த்துக்கொண்டு அரண்மனைக்குப் போக ஆரம்பித்தான். கடைசியில் வழி தெரியாமல் அலைந்து கொண்டிருந்தான். மாலைப்பொழுது நெருங்கி இரவு நெருங்க ஆரம்பித்தது. கடைசியில் வழி தெரியாமல் விளக்கு எரிவதைக்கண்டு அந்த இடத்தை நோக்கிச் சென்றான். அந்த இடத்தை அடைந்ததும் வீடு என்பதைக்கண்டு அவ்வீட்டின் அனுமதிபெற்று படுத்து உறங்கினான். அவன் நன்கு உறங்கும் சமயம் ஒரு கனவு கண்டான். அதாவது "இந்த இடத்தில் இருக்கும் உழவாளியின் மனைவி பிறந்தெடுக்கும் குழந்தைதான் உன்னுடைய அரசாட்சிக்குப் பின் வரப்போகும் அரசன், என்று ஜோதிடன் சொல்வதாக "இருந்தது". உடனே அவன் திடுக்கிட்டு விழித்துப்பார்த்தான். அப்பொழுது விறகு வெட்டியின் மனைவிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்து, தாய் இறந்து விட்டதாக அறிந்தான். இதற்குள் பொழுது விடிந்தது. அந்த சமயம் மந்திரியும் அந்த இடத்திற்கு அரசனை தேடுவதற்காக வந்தான். மந்திரியைக் கண்டதும் அரசன் தான் கண்ட கனவை மந்திரிக்குச் சொல்லி, தான் இந்த குழந்தையைப் பெற்று வருவதாகவும், நீ இவனை நம் நாட்டுப் பக்கத்திலுள்ள 'நைஜர்' என்ற நதியில் போட்டு விடு, என்றான். காலையில் விறகுவெட்டி, புதியவன் அரசன் என்று அறிந்து பயமுற்றான். ஆனால் அரசன் அவனிடம் நீ இந்த தாயில்லாக் குழந்தையைக் கொடு. நான் என் அரண்மனைத்தோழி

யிடம் கொடுத்து காப்பாற்றுகிறேன், என்று கூறி அவனைப் பெற்று வந்தான்.

மந்திரி குழந்தையை எடுத்துச் சென்று, தன் நாட்டிலுள்ள ஆற்றில் போட்டு விட்டுத் தன் நாட்டிற்குச் சென்று விட்டான். அவ்வழியே வந்த ஒரு மங்கை அக் குழந்தையைக் கண்டதும் தொட்டிலுடன் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றாள். அவளுக்குக் குழந்தை இல்லாததால் அக் குழந்தையை அன்புடன் வளர்த்தாள். குழந்தை "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக" வளர்ந்து வந்தது. குழந்தைக்கு வயது நான்கு ஆயிற்று. அவளுடைய கணவன், தோட்டக்காரனும் அன்புடன் வளர்த்து வந்தான்.

ஒருநாள் அரசனும், மந்திரியும் ஊரைச்சுற்றி வரும்போது அந்த தோட்டத்திற்குச் சென்றார்கள். அத்தோட்டத்தில் இந்தப் பையனைக் கண்டதும், தான் எடுத்து வந்த குழந்தையின் முகமாக இருப்பதால், அவர்கள் தோட்டக்காரனை " இவன் யார் " என்று கேட்டார்கள். அதற்கு அவன் தன் பெண்டாட்டி ஆற்றில் கண்டெடுத்ததாகக் கூறினான். இதைக் கேட்டதும் அரசன் தோட்டக்காரனை 'இந்தக் குழந்தை இராஜகளையாய் இருப்பதால் அவனுக்கு நாங்கள் வில்வித்தை, வாள்வித்தை முதலியன கற்றுத் தருகிறோம். அவன் எங்களிடத்தில் இருக்கட்டும், என்றான். அவனும் அவன் மனைவியும் விருப்பமின்றி; அரசன் கட்டளைக்கு அஞ்சி, கொடுத்து விட்டனர். சிறிது நாள் கழித்து அரசன் மந்திரியிடம் " இந்த முறையாவது நன்கு காரியத்தை முடி " என்றான். உடனே மந்திரி குழந்தையைத்தன் ஊரின் அருகே உள்ள மலைக்கு எடுத்துச் சென்று, கொன்றுவிட்டு ஓடிவந்துவிட்டான். அந்த சமயத்தில் அவ்வழியே வந்த சன்னியாசிகள் அவனைக் கண்டதும் கத்தியை மார்பிலிருந்து வெளி எடுத்து, முகத்திற்கு தண்ணீர் தெளித்து மூர்ச்சை தெளிவித்தார்கள். அவனும் மூர்ச்சை தெளிந்து விஷயத்தை அவர்களிடம் சொன்னான். அன்று முதல் அவன் அவர்களிடம் சிஷ்யனாக இருந்தான். இவ்வாறு இருக்கும் சமயத்தில் ஒருநாள் அவர்கள் அரசன் வீட்டிற்குச் சென்றார்கள். அரசன் அந்த சிறு பையனைக் கண்டதும் அவர்களை யாரென்று வினவினான். அதற்கு அவர்கள் மேல் நடந்த விஷயத்தைத் தெரிவித்தார்கள். அதைக் கண்டு அரசன் அவர்களிடம் இதற்குள் ஏன் இவனைத் துறவி ஆக்கினீர்கள்? இவன் அரண்மனையில் போர் வீரனாக இருக்கட்டும், இவன் வலிமையுள்ளவனாகவும், புத்தி உள்ளவனாகவும் இருக்கிறான், ஆகையால் இவன் இங்கேயே இருக்கட்டும், நீங்கள் மட்டும் வெளியே போங்கள், என்றான். அரசன் கட்டளைக்குப் பயந்து அவர்கள் வெளியே சென்று விட்டனர். பையனுக்கு பருவ வயதாதலால் நன்கு வாள், வில் வித்தையில் தேர்ச்சியுற்றான், போர்க்களத்தில் நல்ல போர் தளகர்த்தனாகவும் ஆனான்,

அரசன் தன் பெண்ணுக்கு வயதாகிவிட்டதால் சீக்கிரமாக் மணம் செய்து விட வேண்டுமென்று விரும்பினான். மந்திரியைக் கூப்பிட்டு, "தன் பெண்ணுக்காக தூரத்தில் ஓர் அரண்மனை செய்து அதில் பல ஊர்களை உண்டாக்கி அதில் தன் பெண்ணை வைக்கச் சொன்னான்" மேலும் ஓர் கடிதம் எழுதி அங்குள்ள காவலனுக்கு இந்த கடிதத்தைக் கொண்டு வருபவனைக் கொன்று விடும்படி செய்யச் சொன்னான். சீக்கிரம் நான் ஒரு மருமகனைப் பெண்ணுக்காகத் தேடித் தருகிறேன் என்றான். உடனே மந்திரி அவைகளைச் செய்து முடித்தான். கலியாண வேலைகள் விரைவாக நடந்துக்கொண்டிருந்தன. மந்திரி ஓர் கடிதம் எழுதி தளகர்த்தனிடம் கொடுத்து புதிய அரண்மனையிலுள்ள காவலனிடம் கொடுக்கும்படிச் சொன்னான். அவன் உடனே விரைவாகச் சென்று, காவலனிடம் கொடுக்க அரண்மனைக்குச் சென்றான். அதை அடைந்தும் காவற்காரன் இல்லாதது கண்டு பக்கத்திலுள்ள தோட்டத்திற்குச் சென்று படுத்துத் தூங்கினான். அந்த வழியாக வந்த அரசனுடைய பெண் இவன் அழகைக் கண்டதும் மயங்கி மணக்க விரும்பினாள். அப்பொழுது அவள், அவன் பையில் கடிதம் இருப்பதைப் பார்த்து தோழிகளின் மூலம் அதை எடுத்து வரச் செய்தாள். கடிதத்தில் அவள், "இந்த கடிதம் கொண்டு வருபவனை உடனே கொன்று விடவும்" என்று எழுதியிருந்ததைப் பார்த்து மயக்கமுற்று கீழே விழுந்தாள். பிறகு தோழிகள் விஷயம் கண்டு அவர்கள் இந்த கடிதத்தைக் கிழித்து விட்டு, வேறு ஓர் கடிதத்தில், "இந்த கடிதம் கொண்டு வருபவன் என் மருமகன். உடனே கலியாணம் முடித்து ஊர்வலம் வரச் செய்யவும்" என்று எழுதி வைத்து விடுங்கள், என்றார்கள். அதன்படி அவளும் செய்தாள். அதைத் தோழிகள் அவன் பையில் வைத்து விட்டார்கள். தளகர்த்தன் கண்விழித்து நேரம் ஆகிவிட்டதைப் பார்த்து, கடிதத்தைக் காவலனிடம் கொடுத்தான். "காவலன் விஷயமறிந்து காரியதரிசியிடம் கொடுத்தான். உடனே திருமணம் நடந்து ஊர்வலம் வந்து கொண்டிருந்தனர். அரசன் மருமகனுக்காகத் தேடி அதில் ஒருவனைத் தேர்ந்தெடுத்து விட்டு, விஷயத்தைச் சொல்ல புதிய ஊருக்கு வந்தான். அவன் அரண்மனையிலிருந்து தன் பெண்ணும், தளகர்த்தனும் ஊர்வலம் வருவதைக் கண்டு, கோபம் கொண்டான். அவன் விஷயமறிந்து அவர்கள் இருவரையும் ஆசீர்வதித்தான். அவன் தன் ஊருக்கு அழைத்துச் சென்று "மகுடாபிஷேகம்" செய்தான். அதனால் அவன் "விதியை வெல்ல எவராலும் முடியாது" என்பதை அறிந்து, ஜோதிடனை சிறையிலிருந்து விடுதலை செய்து, பல பரிசுகள் வழங்கினான். சிறிய இளவரசனும், இராஜ குமாரியும் சுகமாக வாழ்ந்து வந்தார்கள்.

ஆக்கியோன்: பட்டாபிராமன்
ஐந்தாம் படிவம்

பொன் தாடிக் குள்ளன்

'பார்த்தசாரதி, VI'

1

மூன்ஞெரு காலத்தில் மகத ராஜ்யத்தை மகேந்திரவர்மன் என்று ஒரு அரசன் ஆண்டுவந்தான். அவனுக்குக் குந்தளா என்ற பெண் இருந்தாள். அவள் மிக அழகு வாய்ந்தவள். அவள் பார்ப்பதற்குக் குறுகுறுவென இருப்பாள். அவளுடைய தாய் சிறுவயதிலேயே இறந்துவிட்டதனுல் செல்லமாக வளர்க்கப்பட்டு வந்தாள். நாட்கள் சென்றன குந்தளா மணப் பருவமடைந்தாள். அரசன் திருமணத்தின் பொருட்டு ஐம்பத்தாறு தேசத்து அரச குமாரர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பினுன். சுயம்வரத்திற்கு இன்னும் ஒரு வாரமிருந்தது. மகதராஜ்யம் அல்லோகல்லப்பட்டது. எங்கும் மாவிலைத் தோரணங்களும், வாழை மரங்களும் காட்சி யளித்தன.

2

இது இப்படியிருக்க ஒரு ஆத்மா யோசனை செய்துகொண்டிருந் தது. அதுதான் மந்திரவாதி பொன்தாடிக் குள்ளன். அவனுக்கு குந்தளாவின்மேல் ஒரு கண் இருந்தது. எப்படியாவது அவளை சுயம்வரத்தன்று எடுத்துச் செல்லவேண்டுமென்று சூழ்ச்சி செய் தான். அதாவது தானும் அச் சுயம்வரத்திற்குச் சென்று எல்லோ ரையும் மயக்க முறச் செய்துவிட்டு குந்தளாவை எடுத்துச் சென்று விடுவது என்று திட்டமிட்டுக்கொண்டான். அதன்படி வேண்டிய வைகளைத் தயார் செய்துகொண்டான். நாட்கள் வளர்ந்து கொண்டே சென்றன. சுயம்வரதினமும் வந்தது. ஐம்பத்தாறு தேசத்து ராஜகுமாரர்களும், பொன்தாடிக் குள்ளனும் வந்து சேர்ந்தார்கள். மணி ஓடிக்கொண்டே சென்றன. ஆயிற்று இன் னும் ஒரு மணியில் குந்தளா கையில் மாலையுடன் மண்டபத்திற்கு வருவாள். மாலையை இஷ்டப்பட்ட குமாரனுக்குப் போடுவாள். இதோ கலகலப்பு கேட்கிறதே! ஆம்! சந்தேகமில்லை தங்கப் பதுமை போல் ஒருவள் வருகிருள். அவள் யார்? குந்தளா மண்டபத்தினுள் நுழைந்தாள். தாதிகள் ஒவ்வொரு அரசகுமாரனைப்பற்றிக் கூறிக் கொண்டுவர குந்தளா விச்வ தேசத்து சூரியவர்மனுக்கு மாலையிட் டாள். மகேந்திரன் அவர்களை மணப்பந்தலுக்கு அழைத்தான். அவர்களிருவரும் மணப்பந்தலில் உட்கார்ந்தார்கள். கொட்டு மேளம் முழங்குகிறது. நாதஸ்வரம் காதைத் துளைக்கிறது அதிர் வேட்டுகள் வெடிக்கின்றன. சூர்யவர்மன் குந்தளாவின் கழுத்தில் தாலியைக் கட்டினுன். என்ன அதிசயம்! எங்கும் புகை கிளம்பு கிறதே. ஒவ்வொரு அரசகுமாரன்களும் மயங்கி விழுகிருர்களே.

இதெல்லாவற்றிற்கும் காரணம் பொன்தாடிக் குள்ளன்தான். ஆயிற்று இதோ குள்ளன் குந்தளாவை எடுத்துச் செல்லுகிறான். சிறிது நேரம் ஆயிற்று. மகேந்திரன் நினைவிற்கு வந்தான். சூரிய வர்மனைப்பார்த்து என் குமாரி குந்தளாவை நீ இன்னும் 4 மாதத்தில் தேடி அழைத்துக்கொண்டு வாராவிட்டால் உன்னைச் சிரச்சேதம் செய்வேன் என்று கடுமையாகக் கூறினான். இதைக் கண்டதும் சூரியவர்மன் ஒரு குதிரையையும் ஒரு வாளையும் வாங்கிக்கொண்டு சென்றான். தன் குதிரையைத் தட்டிவிட்டான். அது போய்க் கொண்டேயிருந்தது. சூரியன் உலகத்திற்குத் தன் தினசரிக் கடமையை செய்துவிட்டு, சூரியவர்மனின் கஷ்டத்தைக் காணச் சகிக்காதவனாய் மேற்றிசையில் மூழ்கினான். இதை உணர்ந்த சூரிய வர்மன் அருகிலிருக்கும் ஒரு ஊரின்கண் வந்தடைந்தான். அங்கு ஒரு பாட்டி வீட்டில் தங்கினான்.

3

இரவுப்போதில் சூரியவர்மன் அப்பட்டிணத்தின் அதிசயம் என்ன என்று அப்பாட்டியைக் கேட்டான். அவள் சொல்வாள் :— இவ்வூரில் ஒரு மலை இருக்கிறது. அம்மலையில் ஒரு பாம்பு இருக்கிறது. அதன் அருகில் ஒரு கத்தி இருக்கிறது. அக்கத்தியை எவன் எடுக்கிறானோ அவனை அது கடித்துவிடும். மேலும் அம்மலையின் அடிவாரத்தில ஒரு பாழடைந்த குகை உள்ளது. அதில் ஒரு கடிவாளம் உள்ளது. அக்கடிவாளத்தை எடுத்தவுடன் ஒரு குதிரை ஓடிவரும். அதன் மேல் அக்கடிவாளத்தைக்கட்டிவிட்டால் அவன் பெரிய வீரனாய்விடுவான். நீ அதைக் கட்டிவிட்டால் அந்த கத்தியை அந்தக்குதிரையின் மூலம் பெறலாம். நீ நாளை சென்று வெற்றியுடன் திரும்புஎன்று கூறினாள். சூரியவர்மனும் அதை அடக்குவதற்கு ஆசைகொண்டான். மறுநாள் பாட்டி சொன்னபடி கடிவாளத்தைக் குதிரையின் மேல் கட்டிவிட்டான். குதிரை இவனைப்பார்த்து அக்கத்தியை நீ நாளை பகல் பன்னிரண்டு மணிக்கு எடுத்துக்கொள். இக்கேடயத்தினுதவியால் அப்பாம்பைக் கொன்றுவிடு. பின்பு நான் உன்னை குள்ளன் வசிக்கும் மலைப்பிரதேசத்துக்கு அழைத்துச் செல்கிறேன் என்றுகூறிற்று. மறுநாள் குதிரை சொல்லியபடி கத்தியை எடுத்துக்கொண்டான். இதற்குப்பின் குள்ளன் வசித்த மலைப்பிரதேசத்திற்குக் குதிரை இவனை அழைத்துச் சென்றது. அவ்விடத்தில் குதிரை இவனைப்பார்த்து இக் கத்தி மந்திரசக்தி வாய்ந்ததது. நீ குள்ளனுடைய அரண்மனைக்குச் சென்றவுடன் உனது இடதுபக்கத்திலிருக்கும் குட்டையிலிருந்து சிறிது நீர் எடுத்துக்கொள். பின்பு அவனுடைய மாளிகைக்குள் நுழைந்ததும் மஞ்சத்தில் ஒருகுல்லாய் இருக்கும் அதையும் எடுத்துக்கொள். தாடிக்குள்ளனைக் கொல்வதற்கு முன் அவன் தாடியில்

ஒன்றை எடுத்துக்கொள். இவைகளை மறக்காமல் எடுத்துக்கொள், மஞ்சத்தைத் தாண்டினால் குந்தளா ஒரு கண்ணாடி அறையில் மயக்க முற்று இருப்பாள். அவளை அப்படியே எடுத்துக்கொள் என்று கூறியது.

4

இனி சிறிது குந்தளாவைக் கவனிப்போம். குந்தளாவை தான் மணம் செய்து கொள்ளவேண்டுமென்ற எண்ணத்துடன் கொண்டு வந்த குள்ளன் அவள் இணங்காமையினால் அவளை ஒரு அறையில் போட்டுப் பூட்டிவைத்துவிட்டான். அவளுக்கு தினமும் ஆகாரம் போட்டுக்காப்பாற்றி வந்தான். அவன் அவளுக்குத்தெரியாமல் வந்து பார்த்துச்சென்முன். ஒருநாள் அவன் இப்படி வரும்போது அவனுடையக் குல்லாய் கீழே விழவே அவன் அவள் கண்களுக்குத் தென்பட்டுவிட்டாள் இதைத் தெரிந்து கொண்டுவிட்டான் அவள். மறுநாள் அவன் வருவதற்கு முன் குல்லாயைத் தான் போட்டுக் கொண்டுவிட்டாள். பின்பு அவள் அவனைப்பார்த்து இனி அவன் இப்படி வரக்கூடாது என்று கேட்டுக்கொண்டாள். அவனும் இசைந்தான்.

இது இப்படியிருக்க அங்கு வந்த இளவரசன் சூரியவர்மன் குள்ளனின் அரண்மனை மணியை அடித்தவுடன் குள்ளன் ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு இளவரசனை எதிர்க்கத் தயாராய் வாயிலையடைந்தான். இவனைக் கண்டவுடன் குள்ளன் பயந்து கொண்டே அம்மந்திரக் கத்தியைக் கேட்டான். இளவரசன் அவனைப் பார்த்துத் தாடியிலிருந்து ஒரு மயிர் தா எனக்கேட்டான். அதன்படியே அவன் மயிரைக்கொடுத்தான். கொடுத்ததை வாங்கிக் கொண்டு சண்டைக்கு ஆயத்தமானுன் இளவரசன். கடும்போர் இருவருக்கும் நடந்தது. கடைசியில் இளவரசன் குள்ளனைத் தன்னுடைய மந்திரக்கத்தியினால் கொன்முன், என்ன ஆச்சரியம்! அவனுடைய தாடியெல்லாம் போய்விட்டது. இப்போது இளவரசனுக்கு உண்மை புரிந்தது. பின்பு அவன் குட்டையில் சிறிது நீர் எடுத்துக் கொண்டான். அரண்மனையில் குந்தளா மயக்க முற்று விழ்ந்திருந்தாள். உடனே அவளையும், குதிரை சொல்லிய குல்லாவையும் எடுத்துக் கொண்டான். இருவரும் வெளியில் வந்தவுடன் குதிரை இவர்களை அழைத்துக்கொண்டு தன் மலையின் அடிவாரத்தில் விட்டு விட்டுக் கூற ஆரம்பித்தது. நீ இங்கு சிறிது தூங்குவாயானால் இவளை வேறொரு அரசன் கவர்ந்துக் கொள்ளக் கூடும். அவன் இவளை அவள் தகப்பனிடம் சேர்த்து விட்டு விடுவான். ஆனால் ஒன்று இவளை எவரும் எழுப்பமுடியாது. அரசன் கட்டளையிட்டவுடன் நீ சென்று இத்தண்ணீரை அவள் மேல் தெளித்தால் எழுந்து விடுவாள். பின்பு நீ அரசனிடம் நான் தான்

தேடினேன் என்று சொன்னால் அவன் நம்பமாட்டான். நீ உடனே இத்தாடி மயிரையும் குல்லாவையும் காண்பி. அவன் சந்தேகம் நீங்கப்பெற்று உனக்கு ராஜ்யத்தையும் அளிப்பான். சாக்கிரதை என்று சொல்லிவிட்டு சென்றது.

5

அதேபோல் இவன் ஒரு மரத்தடியில் தூங்க பக்கத்துத் தேச அரசரான மகிபாலர் வேட்டையாட காட்டுக்கு வந்தார். அவர் குந்தளாவைப் பார்த்ததும் அவளை தனது குதிரையின் மேல் வைத்து மகிகேந்திரனிடம் சேர்த்தான். மகேந்திரன் அவளது மயக்கத்தைத் தெளிவிக்க அரும் பாடு பட்டான். ஒன்றும் பலனில்லை. கடைசியில் ஒரு அறிக்கை விடுத்தான். அதன் படி யார் அவளை எழுந்திருக்கச்செய்கிறாரோ அவனுக்கு பாதி ராஜ்யம் கொடுப்பதாகவும் கூறினான். ஒருவரும் முன்வரவில்லை. கடைசியில் சூரியவர்மன் தன் தண்ணீரின் உதவியினால் அவளை எழுப்பினான். எழுப்பிய உடன் தான் யார் என்பதையும் கூறினான். அரசன் சினம் கொண்டு அவனைத் தூக்கிலிடுமாறு உத்தரவிட்டான். உடனே சூரியவர்மன் நடந்ததைக் கூறி தாடி மயிர், குல்லாய், நீர் முதலிய வற்றை அரசனிடம் காண்பித்தான். அரசன் மகிழ்ந்து அவனுக்குப் பாதி ராஜ்யம் கொடுத்தான். மறுபடியும் எங்கும் கொட்டு மேளம் ஒலிக்கிறது. வாத்தியங்கள் முழங்குகின்றன. தோரணங்கள் வாழை மரங்கள் காட்சியளிக்கின்றன. மக்கள் குதூகலமடைகின்றனர். சூரியவர்மன் பட்டத்து இளவரசாகிறான் குந்தளாவுடன்.

சுபம் ! சுபம் !! சுபம் !!!

பேதம் ஏன் ?

தி. கி. அனந்தாச்சாரி, VI Form.

ஐந்தறிவுடன் மேலாக ஒன்றையும் பெற்று உயிர்ப்பிராணி களுள் சிறந்து காணப்படுபவன் மனிதன். ஆனால் அந்த ஆறுவதான ஆய்வறிவை அவன் மறந்து சில சமயங்களில் குணத்தினால் ஐயறிவும் ரூபத்தினால் மனிதனாகவும் மாறிவிடுவதுதான் விநோதமானது.

தொழில் முறையால் மனிதன் நான்கு வகையாக ஆதியில் பகுக்கப்பட்டான். அவ்விதம் பகுக்கப்பட்டவர்களின் சந்ததியில் தோன்றியவர்களும் பாரம்பரையாக முன்னோர்களின் தொழிலையே மேற்கொண்டனர். நாளடைவில் தொழில்முறையில் உயர்வு, தாழ்வு என்ற பேதம் ஏற்பட்டு பாகுபட்டமக்களும் தாம் தாம் உயர்ந்தவ

ரென்ற எண்ணத்தினால் சச்சரவிடலாயினர். இச்சச்சரவைக் கண்டு சகியாது பல மகான்கள் மதபேதங்களைப் போக்கமுயன்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புத்தர், மகாவீரர் போன்றவர்கள் இதற்கென்றே உழைத்தவர்களாவர்.

அப் பெரியார்களின் முயற்சியினால் உலகம் உண்மையைச் சிறிது உணர ஆரம்பித்தது. பகுத்தறிவை மூடியிருந்த போர்வை விலகியது. புத்தர்காலத்தில் ஆரம்பித்த பேதம் காந்தியின் காலத்திலும் முழுதும் கரந்தொழியாதது ஆச்சர்யமே. ஆனாலும் உலக மக்கள்யாவரும் ஒரேமதம். ஒரேகொள்கை உடையவர் என்பதை உணர்ந்து செயல்படும் இக்காலத்தில் நிறபேதம் எவ்விதமோ சிலர் மாட்டுபுகுந்து மட்டற்ற மதியற்ற செயல்களைக் கண்டும் கேட்டும் மனமுடையாதில்லை.

ஜீவராசிகள் பலவேறு நிறங்களைப் பெற்றிருக்கின்றன. எதற்காக? தற்காப்புக்காக. இயற்கையின் நிறத்திலே தன்னை மறைத்து தன் எதிரியை ஏய்ப்பதற்காக இயற்கையாக ஏற்பட்டுள்ளது. கண்களைக்கவரும் வர்ணங்களையுடைய புஷ்பங்களைக்காண்கிறோம். பெண்களின் கூந்தலை அழகு செய்வதறகு ஏற்பட்டநிறமா அது? அல்லது இயற்கை உலகுக்கு எழிலைக்கொடுக்கதான் ஏற்பட்டதா? இல்லை, அதன் சுயநலத்திற்காகவே தன்னிடம் அழகையும்—தேனையும் உற்பத்திசெய்துகொண்டிருக்கிறது. வண்டுகளைக் கவர்ந்து தன் இனவிருத்திக்காக—தன் சந்ததி பெருக்கத்துக்காக—தன்னை கவர்ச்சியுடையதாக்கிக் கொள்கிறது. இவை பிராணிகள், தாவரங்கள் நூல் வல்லோரின் முடிபு.

மக்களும் பல்வேறு மண்டலங்களின் மாறுபட்ட சீதோஷ்ண நிலையாலும், மண்ணின் வகையினாலும் நிறத்திலும் மாறுபட்டிருக்கின்றனர். ஐரோப்பியர் வெள்ளை நிறமும் சீனர் மஞ்சள் நிறமும், ஆப்ரிக்கரும் இந்தியரும் கருநிறமும் பெற்றுள்ளனர். அதனால் வெள்ளைநிறத்தினருக்கு மற்ற நிறத்தினர் அடிமைகள் என்பது தான் பொருளா?

மதபேதங்கள் மாய்ந்து மறைந்துவிட்டன. இனவெறிகளும் இடம்தெரியாது ஒழிந்துகொண்டிருக்கின்றன. நிறத்திமிர்மட்டும் இன்று உலகில் பல இன்னல்களை விளைத்துவருகிறது. இம்மடமையைக் கண்டு மனம் வெதும்பாதிருக்க முடியவில்லை, ஆனால் மற்ற பேதங்களுக்குண்டான அழிவு இதற்கும் உண்டாகாமல் போவதில்லை.

மதம், இனம், நிறம் போன்றகொடிய ஆயுதங்கள் மக்கட் குழுவையே மடியச்செய்வதாகும். இவைகள் அணு, காஸ்மிக், ஜலவாயுகுண்டுகளைக்காட்டிலும் பெரிது. அன்றியும் முன்னவை மூன்று மழிந்தால் பின்னவைக்கு உலகில் இடமே இல்லை.

இன்றைய உலகில் ஒருபுறம் இனமும் மறுபுறம் நிறமும் பெரும் போராட்டத்தில் இறங்கியிருக்கிறது. இப் போராட்டம் ஓய்ந்து உலகில் சாந்தி நிலவ காந்தியின் சந்ததி என்றும் போராடும் வெற்றியும் அடையும் என்பதில் என்றும் ஐயமேயில்லை.

உத்தமர் காந்தி

★ "செயற்கரிய செய்வார் பெரியர்" என்றபடி தம் அறிவாலும் ஆற்றலாலும் உலகின்கண் பல பெரியார்கள் பல துறைகளிலும் அரிய செயல்களைச் செய்து உலகப்புகழுடன் உதித்துளளனர். அவர்களுள் மஹாத்மா காந்தியடிகள் மிகவும் முக்கியமாவார்.

★ காந்தியடிகள் பம்பாய் மாகாணத்தை அடுத்த போர்பந்தரில் 1869ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ம் தேதியன்று உதித்தார். இவர் தந்தை "கரம்சந்த் காந்தி" எனப்படுவார். இவர் தாய் புத்லி பாய் எனப்படுவார். காந்தியடிகளின் முழுப்பெயர் "மோகனதாஸ் கரம்சந்த் காந்தி" என்பது.

★ காந்தியடிகள் இளம் பிராயத்திலேயே அன்பு, இரக்கம், தன்னலங் கருதாமை, பிறர்க்குதவி செய்தல் முதலிய அரும்பெருங் குணங்கள் அமையப்பெற்று விளங்கினார். இவர் தம் ஏழாம் வயதில் "ராஜகோட்" என்னும் ஊரையடைந்து அங்கிருந்த ஆரம்பப்பள்ளியில் கல்வி கற்றார். பின்னர் பன்னிரண்டாம் வயதில் உயர்தரப்பள்ளியில் சேர்ந்து படித்தார். பதின்மூன்றும் வயதில் திருமணம் நடந்தது. சில நாட்களில் இவருடைய தந்தை காலமானார்.

★ தந்தை இறந்த சில நாட்களில் இவர் உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் வெற்றிபெற்று மேல்படிப்புக்கு இங்கிலாந்துசெல்ல விரும்பினார். இவருக்கு பெருந்தடைகள் குறுக்கிட்டன. அன்னையாரிடம் "மதுவையும, மாமிசத்தையும் தொடுவதில்லை, பிறமாதரை சகோதரிகளாகவே எண்ணுவேன்" என உறுதிமொழியளித்து இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் தேர்வில் வெற்றிபெற்று மீண்டும் 1891ல் இந்திய நாட்டுக்கு வந்து சிலகாலம் வழக்கறிஞராக வேலைபார்த்தார்.

★ அப்பொழுது வழக்கின்நிமித்தம் தென் ஆப்பிரிக்கா செல்ல நேர்ந்தது. அங்கு இந்தியர் படும் அவதிகளைக்கண்டு மனம்வெதும்பி அவ்வல்லல்களைப் போக்க அரசாங்கத்தையும் எதிர்த்து நின்றார் அப்பொழுது அவர் அடைந்த அல்லல்கட்கு அளவில்லை. அன்னாட்டு இந்தியரிடையே ஒற்றுமையை வளர்த்து போராட்டத்தில் வெற்றிகண்டார்.

★ பிறகு அடிகள் இந்திய நாட்டிற்கு வந்து சுதந்திரவுணர்ச்சியை நாடெங்கும் பரப்பி, விடுதலைப்பெறக் கிளர்ச்சிசெய்தார். ஆங்கில அரசாங்கம் சினம்கொண்டு, அடக்குமுறைகளைப் பிரயோகித்தது. பலமுறை சிறைசென்றார். சட்டமறுப்பு, சத்யாக்ரகம் முதலியவை இவர் கண்டுபிடித்த ஆயுதங்கள்.

★ நாட்டின் சுதந்திரக்கிளர்ச்சி நடைபெறும்பொழுதே நாட்டின் சீரமைப்புக்கான வழிகளையும் அமைத்தார். மக்கள் மக்களாக வாழவேண்டும், என்று மதுவை ஒழிக்கப் போதித்தார். மக்கள் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்பதற்காக நாட்டுமொழியாக இந்தியைப் பரப்பினார். சமத்துவம் வளரவேண்டுமென்பதற்காகத் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார். நம் நாட்டுப் பொருளாதாரநிலை உயரவேண்டுமெனக் கருதிக் கதரியக்கம், கைத்தொழிற்சங்கம். முதலியவற்றைத் தோற்றுவித்தார். இப்படி பல துறைகளிலும் ஆக்கவழிகளில் முன்னேறப் பாடுபட்டார். அஹிம்ஸையும், சத்யாக்ரகமும் அவர் வாழ்வில் சொல்லிலும், செயலிலும் கொண்ட கொள்கைகள்.

★ இவ்வாறு அவர் மேற்கொண்ட அரும் பெரும் தொண்டுகளால் 1947ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ம் நாள் நம் நாடு சுதந்திரம் பெற்றது. மக்கள் மத வேற்றுமை நீங்கி மன ஒற்றுமையுடன் கூடி வாழுமபொருட்டு இவர் செய்த பிரார்த்தனைகள் பல. எடுத்துக் கொண்ட முயற்சிகள் எண்ணிறந்தன. இவரது உத்தமகுணங்கள் போற்றத்தக்கன.

★ இத்தகைய புகழ்பெற்ற உலக உத்தமராகிய நமது மஹாத்மா காந்தியடிகள் 1948ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் தேதி மாலை ஆறுமணிக்குப் பிரார்த்தனைக் கூட்டத்தில் உயிர்நீத்தார். இவரது பிரிவுக்கு உலகமே வருந்தியது.

★ மாணவர்களாகிய நாமும் உத்தமரான காந்தியடிகளின் வழியை பின்பற்றி நடந்து சிறப்பெய்து வோமாக !!!

சுபம் ! மங்களம் !! சுபம் !!!

ர. மணிபார்த்தசாரதி
முதல் படிவம், 'பி' பிரிவு.
நேஷனல் ஹைஸ்கூல்,
திருவல்லிக்கேணி, மதராஸ்-5.

பாரதி கண்ட பராசக்தி

பாரதியார் சீர்திருத்தவானிலே மின்னும் நட்சத்திரம் போன்றவர். இந்த இருபதாம் நூற்றாண்டிலே தமிழ் இலக்கியத்திற்கு முதல்வராகத் திகழ்பவர். தயங்கிக்கிடந்த தமிழ்நாட்டைத் தமது கவிதா சக்தியால் தட்டிஎழுப்பியவர். பாரதிதாம் எழுதிய "மூவர் காதல்" என்ற தலைப்பிலே பாடல்களைப் பாடினார். அவை முறையே, சரஸ்வதி, லக்ஷ்மி, காளி (பராசக்தி) ஆகியவற்றைப் பற்றிதான்.

பாரதியார் ஒருமுறை வீட்டின் மாடியிலே திறந்தவெளியில் ஆகாயத்தைப்பார்த்து உட்கார்ந்துகொண்டிருந்தார். அப்போது இரவு மணி பத்து. எங்கும் இருட்டு கவ்விக்கொண்டிருந்தது. இந்த இருளில்தான் என்ன அமைதி! தான் பகலில இழந்த சக்தியை ஓய்வின்மூலம் மனிதன் இரவில் அதைத் திரும்பவும் பெறுகிறான். அதனால் இருளே சக்தி! இருளே பராசக்தியின் வடிவம் என்று தோன்றுகிறது. மடைதிறந்த வெள்ளம்போல் பொழிகிறார் கவிதா ரசத்தை:—

"அன்னை வடிவமடா—இவள்
ஆதி பராசக்தி தேவியடா—இவள்
இன்னருள் வேண்டுமடா—பின்னர்
யாவுமுலகினில் வசப்பட்டு போமடா," என.

பராசக்தியிடம் பக்தி பாரதியார் நெஞ்சிலே வெகுதூரம் பரவியிருந்தது.

மற்றொருநாள் வீட்டிலே எல்லோரும் உறங்கிக்கொண்டிருந்தனர். புயற்காற்று. ஜன்னல் கண்ணாடிகள் உடைகின்றன. காற்றும், மழையும் வீட்டினுள் படை எடுக்கிறது. பாரதியின் மனைவி, செல்லம்மாள், எழுப்பி செய்தியைச் சொன்னாள். அப்பொழுது பாரதியார் "பராசக்தி காத்திடுவாள்" என்று ஆறுதலளித்தார். இதுவன்றோ அவர் ஆழ்ந்த பக்திக்கு ஆதாரம்.

பாரதியாருக்கு எப்பொழுதும் பராசக்தியின் ஞாபகமேதான் என்பது அவருடைய பாடல்களின் மூலம் உணரலாம். மையிருட்டிலே கண்டார் பராசக்தியை. சூறைக் காற்றிலே கண்டார் பராசக்தியை. பாரதி காட்டியபாதை பக்திபாதை. சக்தியைப் பக்திசெய்தால் நலம் பெருகும், நாடு செழிக்கும் என்றெல்லாம் கூறுகிறார்.

பாரதி தீட்டித்தந்த கவிதைகளைக்கொண்டு நல்வழியில் சென்று பயன் என்ற கோட்டையைப் பிடிப்போமாக, இதற்கு அவர்கண்ட பராசக்தி அருள் கொடுப்பாள் என நம்புகிறேன்.

(A. Somasundaram, V-B.)

நவீன அரிச்சந்திரா

இடம்—திரிசங்கு உலகம்

காலம்—மாலை

பாத்திரங்கள்—அரிச்சந்திரன், சந்திரமதி, லோகிதாசன்.

அரிசந்திரன் :— (வந்துகொண்டே) அடி! சந்திரமதி எங்கேடி போயிட்டே?

சந்திரமதி :— நாதா! நான்லேடிஸ்கிளப்புக்குப் போய் இப்போத் தான் வரேன். உங்க கையிலே என்ன நாதா ?!

அரிச்சந்திரன் :— சந்திரமதி, இன்று கோயிலுக்குப் போனேன். அங்கே வாசலிலேயிருந்து இந்த "செருப்புகளை" அடிச்சுண்டு வந்தேன் கண்மணி !!

சந்திரமதி :— நாதா நானும் லேடிங்கிஸ் கிளப்பிலேயிருந்து சீப்பு, கண்ணாடி, பவுடர், லிப்ஸ்டிக் முதலியவைகளைக் கிளப்பிண்டு வந்துட்டேன். நாதா !! இதோ, என் முகத்தைப் பாருங்கோ. கிறுப், மீசையெல்லாம் வச்சிப்புட்டேன் நாதா !

(அரிச்சந்திரன் அதைக் கண்டு மயக்க முறுகிறான்)

சந்திரமதி :— ஐயையோ ! நாதா ஏன் மூர்ச்சையாயிட்டிங்க,

அரிச்சந்திரன் :— உன் மீசையைப் பார்த்து பயந்துட்டேன் சந்திரமதி,

சந்திரமதி :— இதென்ன அதிசயம் நாதா !!! இப்போ ; பஸ் வேலைக்கு பொம்பிளை—இரயில் வேலைக்குப் பொம்பிளை—ஆபீஸிலேயும் பொம்பிளை—அதனாலே நான் இந்த "மீசையை வச்சுப்புட்டேன் நாதா" !!

அரிச்சந்ரன் :— அடி சந்திரமதி, எங்கடி நம் மகன் லோகிதாஸன்,

லோகிதாஸன் :— (வந்துகொண்டே) அப்பா ; அம்மா !

சந்திரமதி :— கண்ணு ! வந்துட்டியாடா !

லோகிதாஸன் :— அம்மா நான் பள்ளிக்கூடத்திலிருந்து ஓட்டைப் பலகை, பலப்பம், துட்டு, சிகரெட்டு துண்டு எல்லாம் திருடிபிட்டு வந்துட்டேம்மா !! அம்மா, ரொம்ப பசிக்குதே !

சந்திரமதி :— உள்ளே சப்பாத்தி வச்சிருக்கேன் போய் சாப்பிடுடா குழந்தை !

அரிச்சந்திரன் :— அடி சந்திரமதி, நம் பிள்ளையின் சாமார்த்தியத்தை பார்த்தியோ ?

சந்திரமதி :— நாதா, கேட்கணுமா உங்களைப் போலவேதான்.

(லோகிதாஸன் விக்கிக் கொண்டே வந்து) கீழே விழுகிறான்.

சந்திரமதி:— (அவன் இறந்தான் என்று நினைத்து)
"மகனே நீ மாண்டலும் குத்தமில்லே"
உன்னே தங்க தொட்டிலிலே தாலாட்டி
இப்படி தண்ணீர் குடிக்காம மாண்டு போனயே
எம் பெத்த வயிறு பத்தி எரியுதடா" !!
என்று ஒப்பாரிவைக்கிறுள்.

அரிச்சந்திரன்:— (வந்து கொண்டே) இந்தாடி சோடா வயிறு பத்தி எரியுதுன்னு சொன்னியே முதல்லே இதைக் குடி.

லோகிதாஸன்:— (இதைக் கேட்டு) அப்பா! அப்பா! முதல்லே எங்கிட்டே கொடு. (அவசரமாக சோடாவைக் குடிக்கிறுன்)

சந்திரமதி:— ஏண்டா! நீ இறந்துட்டேனு நினேச்சேன்.

லோகிதாஸன்:— இல்லேம்மா, சப்பாத்தி சாப்பிட்ட உடனே தொண்டையிலே அடைச்சுகிச்சு.

அரிசந்திரன்:— அடி சந்திரமதி வாடி நாம்ப ''பீச்சு''க்குப் போலாம்,

சந்திரமதி:— சரி வாங்க போகலாம்.

(திரை விழுகிறது)

ஆக்கியோன்: விஸ்வநாதன்
ஆரும் படிவம்

ஏழையின் இறுதி எண்ணங்கள்

அன்பு நிறைந்த கடவுளே! தங்கள் அன்பின் தன்மைக்கு என் தாழ்மையான வணக்கங்கள் பல. தாங்கள் என்னே தோற்றுவித்தீர் இம்மண்மீதிலே. நிறைந்த செல்வத்தோடல்ல—பரம ஏழையாக. பணமுடையவனுகப் படைக்கப்பட்டிருந்தால் நினேத்திருக்கவேமாட்டேன் உங்களேப்பற்றி. ஏழையான் எனது இடுக்கண்களால்தான் உள்ளுகின்றேன் உங்களே. ஏழைப் பெற்ருேர்களின் வயிற்றில் தோன்றினேன். கைவிடப் பட்டேன் காப்பாற்ற இயலாமல் அன்றுமுதல் நான் அநாதை. ஆதரிப்பாரின்றி அலேகிறேன் அங்குமிங்கும். நகரின் நடைபாதைதான் என் வீட்டின் தரை. ஆகாயம்தான் என் இருக்கையின் கூரை. உணவு விடுதிகளிலிருந்தும், மாளிகைகளிலிருந்தும் கொண்டுவந்து போடும் எச்சிலேகளில் எஞ்சியுள்ள பருக்கைகள் தான் என் ஆகாரம். அதனுல் தான் என் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. இவ்வெச்சிலேயும் இல்லேயேல் நான் என் செய்வேன் உயிர் வாழ இறைவா? இந்நிலேயில் ஏன் நான் படைக்கப் பட்டேன் தங்களால்?

(ஒரு சில நல்லவர்களேத் தவிர) பணம் படைத்தவர்களுக்கும்— நேர்மையற்றவர்களுக்கும்—கல்நெஞ்சர்களுக்கும்—கருப்பு வியாபாரம் செய்

பவர்களுக்கும் தான் இவ்வுலக வாழ்க்கை இன்பமாக இருக்கிறது. என் போன்ற ஏழைகளுக்கு இங்கு இடமில்லையே வதிய. நான் என் செய்வேன். பெயர் சூட்டப்படுகின்றேன் பிச்சைக்காரனென்று; எள்ளப்படுகின்றேன் ஏழ்மை நிலையால்; தூற்றப்படுகின்றேன் துர்நெஞ்சர்களால்; இகழப்படு கின்றேன் இனத்தோழர்களால்; அகற்றப்படுகின்றேன் அநாதையானதால்.

ஒரு தம்பி இல்லை என் தம்பி என்றுதான் நான் கருதிவந்தேன். என்னி லும் சற்று நன்னிலையிலிருக்கும் அவன் என் அன்பினால் நட்பாக்கப்பட்டான் ஆரம்பத்தில். நேசித்தான் என்னையும். நீண்ட வருடங்களல்ல சிலநாட்கள். அறிந்தான் நான் அநாதை என்பதை. அதன்பின் உள்ளொன்றும் புறமொன் றுமாகப் பேசிவந்தான். அறிந்தேன் நான் அவனின் அன்பின் தன்மையை. அகன்றான் என் நட்பினின்று அவனாகவே. இம்மாதிரியான திடீர்மாறுதலின். காரணம் என் ஏழ்மை நிலை என்பதை தாங்கள் அறியீரா?

நான் அநாதை, நண்பர்களால் வெறுக்கப்பட்டது முதல்—தம்பியால் தள்ளப்பட்டது முதல் இன்றுவரை ஒருபிடி சோறின்றி அல்லல் படுகின் றேன். நான் இவ்வுலகில் இந்நிலையில் வாழ்வதெப்படி? நான் வாழவேண்டு மாயின் பணமுடையோனாகவும் இரக்கமற்றவனாகவும்—நீதி நேர்மையற்ற வனாகவும் மாறவேண்டும். என்னையும் அப்படி செய்துவிடுகிறீர்களா? ஐயோ ......! எனக்கு வேண்டாம் அப்படிப்பட்ட வாழ்க்கை நிலை அதனிலும் இறப்பதே இனிதானது.

ஏழைகளுக்கிரங்கும் இறைவா! இம்மாதிரியான ஏழ்மை நிலையி லுள்ள என்னை எதற்காக இப்பூவுலகில் படைத்தீர்கள்? இப்படிப்பட்ட நான் வாழவேண்டுமா இவ்வஞ்சக உலகில்? வதியத்தான் இயலுமா இறக்க மற்ற இங்கே? விரட்டப்படுகின்றேனே எல்லா இடங்களினின்றும் அன்பின் பெற்றோர்களே! நீங்கள் எங்கிருக்கின்றீர்கள்? என்னை இந்நிலையிலே விட் டுச்சென்ற உங்களின் பாதங்களுக்கு என் பணிவான இறுதி வணக்கங்கள் பல. நான்,

"மகன் தந்தைக்காற்றும் உதவி—இவன் தந்தை என்னோற்றான் கொல் லெனுஞ் சொல்" என்றபடி என் கடமையைச் செய்ய இயலாமைக்கு என்னை மன்னித்துவிடுங்கள்.

அறக்கடவுளே! ஏழை வாழ்வின் முடிவுதான் என்ன? ஏழையாகவும் வதிய இடமில்லை இங்கே. நிறைந்த பொருளுடனும் படைக்கப்படவில்லை நான். இந்நிலையிலுள்ள என் வாழ்க்கையின் முடிவை (எதற்காகப் படைத் தீர்களென்று) நீங்களே முடிவு செய்துவிடுங்கள். ஆ!......மயக்கம் வரு கிறதே! கண்கள் இருளுகின்றனவே! இதுதான் என் முடிவா?

(மயக்கத்தால் கீழே விழுந்தவுடன் ஆவி பிரிகிறது.)

ச. துரைசாமி,

ஆரம்படிவம்.

சென்னையைச் சுற்றியுள்ள திருக்கோயில்கள்

[V. SADAGOPAN B.Sc.]

தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளரான ஒருவர், "கம்ப ராமாயணம், திருக்குறள், முத்தொள்ளாயிரம், கலிங்கத்துப்பரணி, ஆழ்வார் நாயன்மார் திருவாக்கு இவையெல்லாம் நமது அழியாத இலக்கிய செல்வம் என்றால் காஞ்சீபுரம், மகாபலிபுரம், சிதம்பரம், ஸ்ரீரங்கம், தஞ்சை, மதுரை முதலான ஸ்தலங்களில் உள்ள கோவில்களெல்லாம் நமது அழியாத சிற்ப செல்வங்கள் என்று சொல்ல வேண்டும்," எனக் கூறுகிறார். பழம்பெரும் பாரதத்தின் பண்டைய கலாசாரத்தை பிரதிபலிக்கும் இவைகளுக்கு இந்நூற்றாண்டில் ஏற்பட்ட கதிதான் என்ன? கவனிப்பார் அற்று கொஞ்சம் கொஞ்சமாக சிதைந்து வருகின்றன. பழையாறை என்ற சரித்ர பிரசித்தி பெற்ற ஊரில் உள்ள கோவிலிலும், தாராசுரத்திலுள்ள பெரிய கோவிலிலும் உள்ள சிலைகள் தான் எவ்வளவு பின்னமடைந்து காணப் படுகிறது. இச்சிற்ப செல்வங்கள் அடங்கிய, கோவில்களுக்கு செல்வார் எண்ணிக்கையும் குறைந்துவருகிறது. T. S. எலியட் (Eliot) என்ற கவி கூறியதுபோல்,

"The cycles of heaven in twenty centuries,
Bring us farther from God, and nearer to the dust."

நம் நாட்டின் விலை மதிக்கமுடியாத இச்சிற்ப செல்வங்கள் நம் நாட்டினரை மட்டும் அல்ல, பிற நாட்டினரையும் தங்களுடைய மோகன சக்தியினால் வசீகரித்திருக்கின்றன. நம் நாடு சுதந்தரமடைவதற்கு முன்னர் ஒருநாள் இங்கு உத்தியோகம் பார்த்து விட்டு, உத்தியோக காலம் முடிந்து ஊருக்கு திரும்புகையில், ஒரு ஆங்கிலேயன் கப்பலிலிருந்து கரையை நோக்கியபடியே சொல்கிறான் "விட்டுபிரிய மனமில்லையே, விசித்ரமான ஆலயங்களையும், விநோதமான கொள்கைகளை உடைய இந்த ஜனங்களையும்! இந்தியாவே சொந்த நாடுபோலத் தோன்றுகிறது."

சென்னையைச்சுற்றி அநேக இடங்களில் இச்சிற்ப செல்வங்கள் பரவிக்கிடக்கின்றன. சென்னைக்கு தெற்கேயுள்ள மகாபலிபுரம், என்ற கனவு லோகமும், திருக்கழுக்குன்றம் என்று இயற்கை எழில் நிறைந்து காணப்படும் திருக்கழுகுக்குன்றமும், காஞ்சீபுரம், என்று, சரித்திர பிரசித்தியும், கலை பிரசித்தியும் கொண்ட கச்சிமா நகரும் இவைகளுக்கு உதாரணமாகும்.

பல்லாவரம் :— மகேந்திரவர்மன் என்ற புகழ்பெற்ற பல்லவ மன்னனுடைய ஞாபகார்த்தமாக பல்லவபுரம் என்று பெயரிடப்பட்ட இவ்வூர் பெயர்சிதைந்து பல்லாவரம் என்று ஆகியிருக்கிறது. ஏழாம்

நூற்றாண்டில் இருந்த இம்மன்னன் கட்டிய குகைக் கோயில்கள் தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் சிதறிக்கிடக்கிறது. மகேந்திர வர்மன் முதலில் கட்டிய குகைக் கோயில் தென்னாற்காடு ஜில்லாவில் உள்ள மண்டகப்பட்டிலும் திருச்சிராப்பள்ளியிலும், புதுக்கோட்டை சமஸ்தானத்தில் உள்ள சித்தன்னவாசல் என்ற கிராமத்திலும், தளவனூரிலும் உள்ளன. சென்னைக்கு தெற்கேயுள்ள பல்லாவரத்திலும் ஒரு குகைக் கோயில் மகேந்திரவர்மனால் கட்டப்பட்டிருக்கிறது. பஞ்சபாண்டவ மலை என்று சொல்லப்படும் குன்றின் சரிவிலே இக் குகைக் கோயில் உள்ளது. இதில் சிவபெருமான் குடிகொண்டிருக்கிறார்.

மகாபலிபுரம் :—சென்னைக்கு தெற்கே, கடலின் கரையிலே அமைந்திருக்கிறது இந்த சொப்ன லோகம். "அக் கடற்கரையும் பாழடைந்த கோவிலும் தான் அலைகளின் ஆரவாரங்களுக்கிடையே எவ்வளவு சரித்ர பிரசங்கமும், வேதாந்த பிரசங்கமும் செய்கின்றன." மகாபலிபுரம் என்ற பெயருக்கும் புராணத்தில் வரும் மகாபலி சக்ரவர்த்திக்கும் ஒருவிதமான சம்பந்தமும் கிடையாது. நாட்டில் உள்ள மல்லர்கள் எல்லோரையும் வென்று மாமல்லர் என்று பட்டப்பெயர் சூட்டிக்கொண்ட நரசிம்ம பல்லவன் ஞாபகார்த்தமாக இது மாமல்லபுரம் என்று அழைக்கப்பட்டது. அது சிதைந்து மஹாபலிபுரம் என்று ஆகியது. இதனுடைய ஆதிபெயர் மல்லை. ஆழ்வார்கள் இவ்வூரை "கடல் மல்லை அல்லது திருக்கடன் மல்லை" என்று குறிப்பிடுகிறார்கள்.

இங்குள்ள சிற்பங்களுள் முக்கியமானவை பஞ்ச ரதங்கள் என்று கூறப்படும் ஐந்து முற்றுபெற்ற சிறு கோயில்கள். ஐந்து ரதங்களும் பஞ்சபாண்டவர்களுடைய ரதங்கள் எனவும் கூறுகிறார்கள். இவைகளைத்தவிர சிங்கம், யானை, அசைபோடுவதுபோல் காணப்படும் காளைமாடு இவைகளும் உள்ளன. மற்றொரு குகையில், சுவற்றில் மகிஷாசுரவதம் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அவைகளுக்குள்ள ஜீவசக்தியை நோக்குங்கால், அவைகள் உயிரற்ற சிலைகள் எனச் சொல்லவே முடியாது. அம்மனின் கண்ணில் கோபக் கனலையும், மஹிஷாசுரனிடத்தில் அலக்ஷ்யபாவத்தையும் வெகு நேர்த்தியாக காண்பித்திருக்கிறார் சிற்பி. அதற்கு நேர் எதிர்த்த சுவற்றில் சயனத் திருக்கோலததில் இருக்கும் ரங்கநாதஸ்வாமி காணப்படுகிறார். அவர் முகத்தில்தான் என்ன தெய்வீக அமைதியும் சாந்தமும். மற்றொரு கல்லில் பகீரதன் தவமும், கங்காவதாரமும் வெகு விரிவாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. மற்றொரு குகையில குன்றைக் குடையாக எடுத்த கோபாலனின் திரு உரு காணப்படுகிறது.

இவைகள் எல்லாவற்றையும் தவிர கடற்கரைக்கு அருகில் கோவில் ஒன்று அமைந்திருக்கிறது. உள்ளே பள்ளிகொண்ட

மூர்த்தி பிரமாண்டமாய் காணப்படுகிறார். அவர் முகத்திலேதான் என்ன தெய்வீக அமைதியும், சாந்தமும். இந்த பெருமாளைத் தான் திருமங்கை மன்னன் "கடல்மல்லைத் தல சயனத்துத் தாமரைக் கண் துயில் அமர்ந்த தலைவன்" என்று பாடியிருக்கிறார். மற்ற ஊர்களில் பள்ளிகொண்டிருக்கும் பெருமானுக்கும் இவ்வூர் பெருமானுக்கும் ஒரு வித்யாசம் உண்டு ஸ்ரீரங்கத்திலுள்ள ரங்க நாதனோ அல்லது மற்ற ஊர்களில் பள்ளிகொண்டிருக்கும் பெருமான்களோ பாம்பின்மேல் (அரவணை) தான் பள்ளிகொண்டிருக்கிறார்கள். ஆனால் இவ்வூர் பெருமான் மாத்திரம் தலத்திலேயே (தரையிலேயே) சயனம் செய்துகொண்டிருக்கிறார். 108 திருப்பதிகளுள் இந்த ஒரு இடத்திலேயே பெருமான் தரையிலே சயனம் செய்துள்ளார். இதைப்பற்றி ஒரு கதையும் வழங்கிவருகிறது. முன்னொரு காலத்தில் ஒரு முனிவர் பாற்கடலுக்குசென்று உலகளந்த பெருமானுக்கு புஷ்ப கைங்கரியம் செய்யவேண்டுமென விரும்பினாராம். அதற்காக அவர் சமுத்ரங்களை கையால் இறைத்து வற்றவைத்து பின்னர் அதன் வழியாக நடந்து பாற்கடலை அடைந்து விடலாம் என்று திட்டமிட்டு, ஏகாக்ர சித்தத்துடன் கடலை (மல்லைக்கு அருகே) இறைக்க ஆரம்பித்தாராம். பக்தனுடைய திட சித்தத்தைக்கண்டு, பரந்தாமன், கிழவன் வேஷம்பூண்டு, முனிவர் தண்ணீரை இறைக்கும் இடத்திற்கு வந்து அவரை பரிகசித்தாராம். முனிவர் வெகுண்டு, "உன்னால் முடிந்தால் எனக்கு உதவிசெய்; அப்படியில்லாவிடில், என் வேலைக்கு தொந்தரவு கொடுக்காது இந்த இடத்தைவிட்டு சென்றுவிடு" என்று கூறினாராம். கிழவரும் தானும் இறைப்பதாகக் கூறி முனிவருடன் இரண்டுகை இறைத்தாராம். என்ன ஆச்சரியம்! கிழவர் கை பட்டவுடன் சமுத்ர தண்ணீரும் வற்ற ஆரம்பித்து விட்டதாம். அப்பொழுது கிழவர் முனிவரைப்பார்த்து "ஐயா, எனக்கு பசிக்கிறது, எனக்கு ஏதாவது ஆகாரம் கொடுங்கள், அப்போது நான் இன்னும் தெம்பாக இறைப்பேன்" என்றாராம். முனிவரும் "நான் ஆகாரம் கொண்டு வருகிறேன். நீ இறைத்துக்கொண்டிரு" என்று கூறிவிட்டு ஆகாரம் கொண்டுவர வீட்டுக்குச் சென்றாராம. முனிவர் சென்றதும், கிழரூபத்தில் வந்திருந்த கடவுள், கடற்கரைக்கு சென்று மணலில் படுத்தாராம். உடனேயே அங்கு கோபுரங்கள் முதலிய தோன்றினவாம். முனிவர் திரும்பி வந்தபின், தான் சென்றபோது இல்லாத ஒரு புதுக்கோவிலையும், அதற்குள்ளே தலத்திலேயே சயனம் செய்து கொண்டிருக்கும் மூர்த்தியையும் கண்டாராம். பகவானுக்குத் தான் பக்தன்மேல் என்ன அன்பு. பாற்கடல் தாண்டிவந்து புஷ்ப கைங்கரியம் செய்ய வேண்டுமென்று அபிப்பிராயப்பட்ட முனிவருக்காகத்தானே பாற்கடலிலிருந்து ஓடோடியும் வந்தான் என்று இக்கதை வழங்குகிறது.

திருக்கழுகுன்றம் :— முன்னொருகாலத்தில் இருரிஷி சகோதரர்கள் இருந்து வந்தார்கள். அவர்களில் ஒருவர் சிவத்தையும், மற்றொருவர் சக்தியாகிய பார்வதியையும் வழிபட்டுவந்தார்கள். இவர்களுள் அடிக்கடி சிவம் பெரிதா சக்தி பெரிதா என சண்டைகள் வந்தன. இவர்கள் நேரே சக்தியிடம் தங்கள் யோகபலத்தால் சென்று தங்கள் சண்டைக்கு தீர்ப்பு கூறும்படி வேண்டினார்கள். சக்தியும், "சிவமும் சக்தியும் ஒன்று, சண்டையை ஒழிப்பது நன்று" எனத் தீர்ப்புக் கூறினாள். அப்படியும் இவர்கள் தங்கள் சண்டையை ஒழிக்கவில்லை. பின்னர் இவர்கள் சிவனிடம் சென்று தீர்ப்புக் கூறும்படி வேண்டினார்கள். சிவனும் "சிவமும் சக்தியும் இரண்டல்ல, அவமே ஒழியத் தவமே புரிவீர்" எனக் கூறினார். இவர்கள் அந்த தீர்ப்பையும் ஒத்துக் கொள்ளவில்லை. அதற்காக சிவன் கோபித்து "நீங்கள் கழுகுகளாக போகக்கடவது," என்று சபித்துவிட்டார். பின்னர் "நீங்கள் கலியுகம் முடிய கழுகுகளாக இருக்கவேண்டும். நீங்கள் காசியிலும் காஞ்சியிலும் நம்மை வழிபட்டு திருக்கழுக்குன்றத்தில் போஜனம் எடுத்துக்கொண்டு, பிறகு சிதம்பரத்திலும், மதுரையிலும் நம்மை வழிபட்டு இராமேச்வரம் போகவேணும்" என்று அனுக்கிரஹம் செய்தார். அம்மாதிரியே இவைகளும் கங்கையிலும், இராமச்வரத்திலும் நீராடி, திருக்கழுகுன்றத்தில போஜனம் முடித்துக்கொண்டு சிதம்பரத்தில் நித்திரைசெய்து வருகிறார்கள் எனக் கூறுகிறார்கள். இக் காரணத்திற்காக இக் குன்றுக்கு திருக்கழுகுக்குன்று எனப் பெயர் வந்தது. அதுவே திரிந்து திருக்கழுக்குன்றமாக மாறிவிட்டது.

அங்கு தினம் சுமார் 11 மணிக்கு இரு கழுகுகள் வடக்கிலிருந்து வருகின்றன. பண்டாரம் கையிலிருக்கும் பிரசாதத்தை சாப்பிட்டுவிட்டு தெற்குநோக்கி பறந்து சென்று விடுகின்றன. இது பல பல நூற்றாண்டுகளாக நடைபெறுகிறது. கி. பி. 1781ம் வருஷம் ஜனவரி மீ 3௳ மத்தியானத்தில் இரு கழுகுகள் இம்மாதிரி வந்து புசித்து சென்றதாக இரு டச்சுக்காரர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

இங்குள்ள சிறு குன்றிற்கு வேதகிரி என்று பெயர். நாலு வேதங்களும் நான்கு உச்சி முகடாக இருக்கிறபடியால் இக் குன்றிற்கு வேதகிரி என்று பெயர் ஏற்பட்டதாம் இக் குன்றின்மேல் கோவில் கொண்டிருக்கும் பெருமான் பெயர் வேதகிரீச்வரர். இப் பெருமானைப்பற்றிக் கூறுகையில்தான் திருஞான சம்பந்தர் "கற்பகத்தை கண்ணாரக் கண்டேனே" என்கிறார் மலையிலிருந்து கீழே இறங்குகையில சுற்றி இருக்கும் கிராமியக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். மரகதப்பாய் விரித்தாற்போல் பச்சை ஆடை உடுத்திதிகழும் இயற்கை அன்னையின் தோற்றம் கண்

கொள்ளாக் காட்சிதான். வழியில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட ஒரு குகை மண்டபத்தையும் காணலாம். அடிவாரத்திலும் ஒரு கோவில் உள்ளது. அக் கோவில் உள்ளே இருக்கும் சிற்ப செல்வங்கள் மிக அற்புதமானவை.

காஞ்சி. கிறிஸ்து பிறப்பதற்கு முன்னமேயே பிரசித்தமாக நாகரீகத்தில் மிகவும் முன்னேறி இருந்தநகரங்களுள் ஒன்று காஞ்சிமா நகர். இதை நம்மவர்கள் "நூறுகோவில் நகரம்" எனக் கூறுவார்கள். திரும்பிபார்க்கும் திசையெல்லாம் கோபுர விமானங்கள் கண்ணில் படும். இதனுடைய சிறப்பைப்பற்றி தேசிகன் என்ற பெரியார் "காசிமுதலிய நன்னகரியெல்லாம் கார் மேனி அருளாளர் கச்சிக்கு ஒவ்வா" எனக்கூறியுள்ளார். ஸம்ஸ்கிருதத்திலும் இந்த அர்த்தத்தை கொண்ட ஒரு ஸ்லோகம் உள்ளது.

புஷ்பேஷு ஜாதி	पुष्पेषु जाति
புருஷேஷு விஷ்ணு	पुरूषेषु विष्णु
நாரீஷு ரம்பா	नारिषु रम्भा
நகரேஷு காஞ்சி	नगरेषु काञ्चि

புஷ்பங்களுள் தலைசிறந்தது ஜாதிபுஷ்பம். புருஷாகளுள தலை சிறந்தவர் விஷ்ணு. பெண்களுள் தலை சிறந்தவள் ரம்பை, நகரங்களுள் தலைசிறந்தது காஞ்சிபுரம் என்பது அந்தபாட்டின் அர்த்தம். காஞ்சிபுரம் நேர்த்தியான கோவில்களைக்கொண்டிருப்பதால் நகரங்களுள் தலைசிறந்ததாகக் கூறப்படுகிறது. இந்நகரில் உள்ள முக்ய மானகோவில்கள் (1) கைலாஸ நாதர் கோவில, வைகுண்ட பெருமாள் கோவில், காமாட்சி அம்மன் கோவில், திருவெஃகாவிலுள்ள சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோவில், ஏகாம்பரநாதர் கோவில் முதலிவை ஆகும்.

கைலாஸ நாதர் கோவில் :—சரித்ரஉலகம் போற்றும் நரசிம்ம பல்லவரின் புதல்வனான ராஜசிம்மனால் இக்கோவில் கட்டப்பட்டது. இந்த ராஜசிம்மனுக்குத்தான் பின்னர் கழற்சிங்கநாயனார் என்று பெயர் ஏற்பட்டது. இக்கோவிலில் உள்ள சிற்பங்கள் தமிழ் நாட்டின் சிற்பத்திறனை பூரணமாக பிரதிபலிக்கின்றன கைலாஸ நாதர் கோவிலைச் சுற்றிப்பார்க்குங்கால் கைலாஸமே இடம் பெயர்ந்து வந்து விட்டதோ என்றுதோன்றுகிறது. இச்சிற்பங்களுள், தக்ஷிணாமூர்த்தி, பிக்ஷாடனமூர்த்தி, கல்யாணசுந்தரர் இவர்களுடைய திரு உருவங்கள் வெகு அழகாக செதுக்கப்பட்டுள்ளன. வட நாட்டில் உள்ள எல்லோரா குகைக் கோவில் கூட கைலாஸ நாதர் கோவிலுடைய பாணியில் அமைக்கப்பட்டுள்ளது எனக் கூறுவாரும் உளர்.

காமாட்சி அம்மன் கோவில். காளாமுகம், பாசுபதம், காபாலிகம் போன்றகிளை மதங்கள் சைவத்திலிருந்து வெடித்திருந்த அக்

நாளில் காமாட்சி தேவி தலை பலிவாங்கும், கொடும் தேவியாக் இருந்தாள். அப்படிப்பட்ட பயங்கரமான சக்திகளைக் கொண்டிருந்த இத்தேவியை ஆதி குரு ஸ்ரீசங்கராச்சாரியார் காஞ்சீபுரத்திற்கு வந்திருந்த போது பயங்கர வடிவத்தை விட்டு விட்டு, கருணைவடிவு கொள்ளவேண்டுமென பிரார்த்திக்க, தேவியும் சம்மதித்தாள். பின்னர் சங்கரர் ஸ்ரீ சக்ரத்தை பிரதிஷ்டைசெய்து பயங்கரியை கருணை நிரம்பியவளாக ஆக்கினார். இதன் பொருட்டு சங்கரர் விக்ரகம் இன்றும் அக்கோவிலில் உள்ளது. பழைய பயங்கர ரூபத்தை தேவியின் மூன்றாவது கண்ணும் சிங்கவாகனமும் இன்னமும் நினைப்பூட்டுகின்றன.

வரதராஜர். காஞ்சீபுரத்திலுள்ள மற்றொரு முக்யமான கோவில் வரதராஜர் கோவில். அற்புதமான அழகும் சாந்தமும் ததும்பும் விக்கிரகம் இது. இவர் வேதாந்த தேசிகருக்கும், ராமாநுஜருக்கும் விசேஷமாக அருள் புரிந்துள்ளார். இவருடைய விசேஷமான உத்ஸவம் கருடோத்ஸவம் ஆகும். அப்போது குமரி முனையிலிருந்து இமயம் வரை உள்ள இந்தியாவின் பல பலகோடிகளிலிருந்து யாத்ரீகர்கள் இங்கு வந்து கூடுகின்றனர்.

திருவெஃகா. தன்மேல் கவி பாடமறுத்ததற்காக ஒரு ஆழ்வாரை பல்லவ ராஜா நாடுகடத்தும் படி உத்தரவிட்டான். ஆழ்வார் காஞ்சியை விட்டு செல்லும் போது, அங்கு (திருவெஃகாவில்) பள்ளி கொண்டிருக்கும் பெருமானை நோக்கி நான் போகின்றேன், நீயும் உன்னுடைய பைநாகப்பாய் சுருட்டிக்கொள், என்ற பொருள் படும்படி ஒரு பாட்டு பாடினார். பெருமானும் தன்னுடைய பாம்பாகிற மெத்தையை சுருட்டிக்கொண்டு ஆழ்வாருடன் காஞ்சியை விட்டு வெளிச்சென்று ஓரிரவு ஒரு ஊரில் தங்கினான். இவர்கள் ஓரிரவு அங்கு தங்கினமையால் அவ்வூருக்கு இன்றும் ஓரிருக்கை என்ற பெயர் வழங்கிவருகிறது. மறுநாள் காலையில் காஞ்சியில் பொழுது புலர்ந்தது. கடவுள் வெளியேறிய படியால் நகரமே சோபையிழந்து சூனியமாகக்காணப்பட்டது. அரசன் தன் தவறை உணர்ந்தான். ஊரைவிட்டு புறப்பட்டு, ஆழ்வாரைக்கண்டு மன்னிப்புக்கேட்டு திரும்பவும் தன் ஊருக்கு வந்து அருளவேண்டும் என்று வேண்டிக் கொண்டதின் பேரில் ஆழ்வார் திரும்பவும் காஞ்சிக்கு வந்தார். கடவுளும் திரும்பினார். ஆழ்வார் கடவுளை, நோக்கி, "காமருபூங் கச்சி மணிவண்ணா, நீயும் நின்பைநாகப்பாய் விரித்துக்கொள் "என்று வேண்டிக்கொண்டதின் பேரில் கடவுளும் ஆலயத்திலுள் சென்று அரவணையின்மேல் துயிலுற்றார் எனக்கூறுகிறார்கள். பெருமான் ஆழ்வார் சொன்னவண்ணம் செய்ததால் இவரை "சொன்னவண்ணம் செய்தபெருமாள்" என்று கூறுகிறார்கள். வடமொழியில் யதோக்த காரி என அழைக்கிறார்கள். இவரைத் தான் குமரகுருபர சுவாமி

கள் "பைந்தமிழ் பின் சென்ற பச்சை பசுங்கொண்டலே" என்று பாடியிருக்கிறார்.

ஏகாம்பரநாதர். காஞ்சியில் அடுத்தபடியாக விசேஷமான சன்னதி ஏகாம்பரநாதர் சன்னதியாகும். தேவாரம் திருவாசகம் என்ற தமிழ் வேதங்களைப்பாடிய அப்பர் சுந்தரர், மாணிக்கவாசகர், "தெய்வக்குழந்தை யுள்ளம்" படைத்த ஞானசம்பந்தர் இவர்களால் தஞ்சம் என்று அடையப்பட்ட மூர்த்தம் இங்குதான் உள்ளது. சம்பந்தர் இம்மூர்த்தியைக்குறிக்குங்கால், "பழத்தில் இன்சுவையும்," 'பண்ணில ஓசையும்" இப்பெருமான் என்கிறர். இது ஒரு சைவ சித்தாந்தியின் அநுபவம் "உண்ணும் சோறு, தின்னும் வெத்திலை எல்லாம் கண்ணனே"—இது வைஷ்ணவ வேதாந்தியின் அநுபவம். ஆழ்வாரின் அபிப்ருயததிலும் நாயன்மார் கூற்றிலும் தான் என்ன ஒருமை. என்ன சமய சமரஸம்! இவ்வாழ்வார்களும் நாயன் மார்களும் வாழ்ந்து பாரதநாட்டை பொன்னுடாக்கிய அந்தக் காலம் திரும்பிவருமா? இவர்களை இம்மாதிரிமாற்றின அக்கோவில் களும், அக்கோவிலில் உள்ள மூர்த்திகளும் தான் நமது மூதாதையர் நமக்களித்த விலை மதிக்கவொணு செல்வம் ஆகும். இந்த மூலதனங் கள் அழியாமல் காப்பாற்றுவதற்கு வேண்டிய சக்தியை நமக்கு எல்லாம் வல்ல இறைவன் அளிக்கட்டும்!

மங்களம்

ॐ

॥ महारानी ॥

लक्ष्मीबाई (झांसी की रानी)

लगभग सौवर्ष पुरानी बात है। महाराष्ट्रदेशमें सतारा के पास कृष्णा नदीके किनारे पर एक छोटा-सा गाँव है। उसी गाँव में मोरो पन्त नामक एक ब्राह्मण रहता था। वे बालाजी बाजी राव पेशवा के भाई चिमाजी आपा साहब के यहाँ पचास रुपये मासिक पर नौकर का काम करते थे।

मोरोपंत के पत्नी का नाम भागीरथी बाई था। इन दोनों को, सन् 1835 नवम्बर सोलह (16) वीं दिन एक कन्या का जन्म हुआ। माँ-बाप ने उसकानाम मनू बाई रखा। परन्तु यही नाम आगे चलकर झांसी की रानी लक्ष्मी बाई हुआ।

लक्ष्मी बाई के पैदा होने के पहले सन् 1824 में महाराष्ट्र देशमें एक वीर पैदा हुए। जिनका नाम नाना साहब पेशवा था। ये वेणु नामक गाँव पैदा हुए थे। इनके पिता का नाम मादव राव था। और माता का नाम गया बाई था। वे भी एक गरीब ब्राह्मण थे।

इस समय में नाना साहब पेशवा ने लक्ष्मी बाई भी बालक के मित्र होगये। दोनों मिलकर पढना लिखना, तीर चलाना, घोडे की सवारी करना, व्यायाम तथा युद्धकला आदी शिक्षा पायी। जब लक्ष्मी बाई बडी हुई तब मोरो पंत को अपनी कन्या के विवाह की चिंता हुई। जब उसने ज्योतिषी को बुलाकर यह बात पूछा, तब उसने कहा कि यह लडकी किसी दिन रानी बनेगी। मोरो पंतने यह न माना।

इस घटने के थोडे दिन बाद झांसी महाराज गंगाधर राव के साथ शादी हो चुकी। थोडे दिन के बाद सन् 1853 ईसवी में राजा गंगाधरराव मर गये। इसके बाद लक्ष्मी बाई विधवा होगयी।

इसके बाद सन् 1853 ईस्वी में देश में असंतोष की आग भडक उठी। अंग्रेजों ने झांसी को पकडलिया और लक्ष्मी बाई पर लडाई करने लगे। ग्यारहदिन तक घमासान लडाई होती रही अंग्रेज़ सिपाही महारानी को जान से पकड़ना चाहते थे। परन्तु महारानी अपनी बहादुरी से दुशमनों की सेनाको चीरती हुई बाहर निकलकर भूखा-प्यासी 102 मील चलकर कालपीजा पहुँची। परन्तु अंग्रेजों ने वहाँ भी अपनी सेनाके साथ लड़ने गये।

लक्ष्मी बाई ने अपनी हारी हुई सेना के साथ बहुत बहादुरी लड़ी। उस लडाई में एक अंग्रेज़ी सिपाही ने रानी के पीछे की ओर से तलवार का वार किया। और रानी ने वहीं मरगयी मरते समय रानी की अवस्था 23 साल को थी। इतने छोडे से जीवन में उन्होने जो वीरता दिखायी-वह हमेशा अमर हो।

JAIHIND

R. Krishna Singh.
IVth Form. A.

॥ भवभूतीयं रामराज्यम् ॥

विदितं इदं आपण्डितं आपामरं च यत्-रामराज्यं कीदृशम्? रामो वा राज्यं कथं अकार्षीत् इति। न इदमपि अविदितं सर्वैः-के के कवयः कथं वा रामराज्यं अवर्णयन् इति। परं ये नाम कवयः वर्णयन्ति वर्णयन्तु ते यथेच्छम्। परं अस्माकं भवभूतेः रामराज्यवर्णने एव मनो मोदतेतमाम्।

वाल्मीकेः रामराज्ये वयं इदं जानीमः-तत्र न पर्यदेवन् विधवाः, नापि व्यालकृतं भयम्, निर्दस्युः अभवत् लोकः, नापि कुर्वते वृद्धाः बालानां प्रेतकार्याणि। इति।

परं वाल्मीके: रामः स्वकुल गौरव परिरक्षणार्थं कैतवेन पतिप्राणां सीतां निर्वासयति। कुल गौरव संरक्षणं धर्म एव। परं ततोऽपि उच्चतरो धर्मो न्याय्यो विचारः। सर्वत्र न्याय्यविचारः परमो धर्मो नृपतीनाम्। राज्ञः सविधे एकतः समग्रं विश्वं अपरतः न्याय्यविचारः। जानाति एव रामः सीता निरपराधा इति। एवं सत्यपि नरपतिस्सन् रामः स्वकुल गौरव परिरक्षणं एकं फलं मनसि कृत्वा निर्विचारं अग्नि परिशुद्धां स्फुरत्कठोरगर्भगुर्वी पुण्यशीलां धर्मपत्नीं सीतां निर्वासयति निर्वासने च तस्याः रामस्य महान् क्लेशः इति नः प्रत्यक्षम्, तच्च अन्यदेतत्। नूनं रामेण चिन्तितं-सीतां निर्वासयता मया स्वकुलगौरवं परिरक्षितं इति। कर्मणानेन न खलुलेशतोऽपि तस्य वंशगौरवं परिरक्षितं भवति। न खलु प्रजाभिः यत् उच्यते तस्य करणमेव राज्ञो धर्मः। परं राज्ञो धर्मः न्याय्यविचारेण सह प्रजेच्छा पूरणम्। सीता पत्नीति किं प्रजैव न भवति। अपि नाम प्रजानां अनुरोधमात्रेणैव माता वा भ्राता पुत्रो वा पत्नी वा निर्वासनीयो वा शूले वा समारोपणीयः?। Brutus (ब्रूटस) महाशयेन पुत्रवधः आदिष्टः पुत्रो दोषीति कृत्वैव, सगरेण असमञ्जसः निर्बासितः पुत्रः प्रजाहिंसक इति कृत्वैव, न केवलं प्रजाभिः अभियुक्त इत्येव। सीता अभियुक्ता। परं जानाति रामः तां निरपराधम्। प्रजानां पुरतः "सीता निरपराधा" इत्यस्य प्रमापणं आवश्यकं चेत् निर्वासनात् पूर्वं स तस्याः अग्नि परीक्षामपि पुनः कर्तव्यतया निदेष्टुं प्राभविष्यत्, न वा ईदृश प्रजाभियोगश्रवणानन्तरं स्वयमेव सपत्नीकः राज्यं त्यक्त्वा वनं अगमिष्यत्। परं वचनस्य अस्य अवकाश एव नास्ति। यदैव अभियोगश्रवणं तदैव निर्वासनं देव्याः सीतायाः। सीताया अपि सत्ता वर्तते एव। तस्या अपि हृदयं जानात्येव नयानयौ, अनुभवत्येव सुखदुःखे। को वा रामः तां एव केवलं दुःखेन योजयितुम्। यः खलु ईदृशः क्रूरकर्मकारी मानवो नरपतिः स खलु सपरिजनः निर्वंश एव संपद्येत। भवभूतिना दृष्टम्-तावता रामचरितं आविलं भवति, इति। अत एव अष्टावक्रस्य पुरतः रामेण प्रतिज्ञापितवान्—

"स्नेहं दयां च सौमित्रिं यदि वा जानकीमपि।
आराधनायलोकस्य मुञ्चतो नास्ति मे व्यथा॥"

भवभूतिः मनुते-कुलीनस्य शुद्धचारित्रस्य मनस्विनो राज्ञः प्रजारञ्जनं परमो धर्मः। स्वीये दोषे प्रजाभिः प्रतिपादिते तत्र न न्याय्यविचारस्यापि अवकाशलेशोऽस्ति। राज्यांगेषु मुख्यो न्याय्यविचारः। मुख्यतमाः किल प्रजाः। तत् तु खलु रामराज्यं भव भूतेरभिप्रेतं, "महात्मनो" ईप्सिततमम्-यत् राज्यं स्वावलम्बिभिः धार्मिकैः जानपदैः उच्यते, यत् राज्यं प्रजैकपक्षपाती राजा पालयति, येन राज्येन सामन्ताः सहानुभूतिं प्रकटयन्ति मनसा वाचा कर्मणा च, यस्मै राज्याय प्रजाः निर्विशङ्कं निरर्गलं करान् (Tax) ददति, यस्मात् राज्यात् भीताः प्रजाः विदेशान् न अधिगमन्ति, यस्य राज्ञः प्रजेच्छापूरणे एव मतिः, यस्मिन् राज्ये प्रजाः सुखिनः, यत्र सत्यसन्धो राजा, यत्र राज्ञः अणुतरदोषोऽपि न, यत्र अनुरक्ताः प्रजाः मधुकराः मधु इव स्वयमेव आपतन्ति मोदन्ते च।

एवं रीत्या पश्यत भवभूतीयं रामराज्यम् रामेण नियुक्तः अपसर्पः दुर्मुखः सीतानिर्वासनं रामस्य मुखात् शृणोति। खिन्नहृदयः सपदि वक्ति "दुर्जनवचनात् इदं व्यवसितम्" इति। कर्णनाराच कल्पं अरुन्तुदं वचनमिदं श्रुत्वा महापातक श्रवणं मन्यमानो रामः "शान्तं पापं" इति त्रिः वक्ति, येन तच्छ्रवणजो दोष दूरे स्यात्। न केवलं "शान्तं पापं" इति वक्ति परं " कथं दुर्जनाः पौरजानपदाः " इति क्रुद्धः दुर्मुखं पृच्छति। अनेन वयमिदं जानीम-रामः न मनसापि प्रजानां निन्दकोऽननुकूलचारी वा॥

अन्यच्च-भवभूतीये रामराज्ये पुण्यात्मा किल नरपतिः शूद्रको शम्बूकः। स किल शिरच्छेदानन्तरं दिव्यां मूर्तिं परिगृह्य रामं-समुपतिष्ठते रामाय जनस्थानं प्रदर्शयितुं प्रवर्तते च। न खलु रामायण वृत्तान्तः एवं विधः उपलभ्यते। रामायणस्य रामः शूद्रः सन् " स तपोऽतप्यत " इति तं हन्ति। भवभूतिः मनुते-सर्वथा अविचाररमणीय एव अयम्। न खलु युक्तं पुण्यकार्यस्य कृते प्राणैः दण्डनम्। अत एव भवभूतीयो रामः शम्बुकं पापात् एव मोचयति। न केवलं पापात् एव मोचयति परं वैराजान् नाम लोकान् अपि प्रापयति। रामेणापि शम्बुक शूद्रमुनिरित्येवाभिधीयते न तु पुनः वृषल इति शूद्र इति वा। रामो मनुते-ईदृशसुकर्मणः अस्य वधः न युक्त एवेति। परं निरपराधायाः निमिकुलजायाः अयोनिजाया निर्भरगर्भखिन्नायाः जानक्याः विवासनपटोः तस्य करुणा नास्ति इत्येव तस्य मारणे प्रयतते॥ एवं भवभूतिः रामराज्यवर्णने अनितरसाधारणीं रीतिं आश्रित्य न केवलं पठितृपाठयितॄणां परं समेषां संस्कृतप्रणयिनां शिरःकम्पनार्हो भवतीति परामृशन्तो वयं सुष्ठूक्तं—"उत्तरे रामचरिते भवभूतिः विशिष्यते" इति मन्यामहे॥

शिवम्

R. Thangaswami.
Hindi Pandit N. H. S. B.

THE GOVERNING BODY

President :

Dr. T. S. Tirumurti.

Founder-Secretary & Correspondent :

Sri N. K. Tirumalachari.

Other Members :

1. Sri C. R. Pattabhi Raman
2. ,, S. Ramaswami Naidu
3. ,, K. Ramiah Chettiar
4. ,, S. Soundararajan
5. ,, K. S. Narayana Iyengar
6. ,, S. S. Vasan
7. ,, S. Lalchand Dadha

Ex-Officio :

8. Mrs. K. K. Rukmani [(Headmistress, N.H.S. (Girls)]
9. Sri N. S. Viswanathan [Headmaster, N.H.S. (Boys)]

Care taker :

10. Sri T. Kumarasami Mehta.

திருவல்லிக்கேணி

தேசியப் பாடசாலை (பிள்ளைகள்)

மங்களம் பொங்குகவே !
சங்கமும் திகிரியும் தாங்கிய பார்த்த
சாரதி யருளால் பாரினி லெங்கும்
மங்களம் பொங்குகவே !

மாநிலம் மகிழ மழைவளம் பொழிக !
ஆனிரை யருளோடு அறநெறி நிறைக !
பானிற மனமொடு பாலர்கள் பயிலும்
தேனினும் இனியநம் தேசீய சாலையில்
மங்களம் பொங்குகவே !

ம ங் க ள ம்

Printed by C. Krishnamurthi, at the Sri Ramakrishna Printing Works,
19-B, Woods Road, Madras-2. and Edited & Published by
Sri N. S. Viswanathan at The National High School (Boys), Triplicane.